பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாசி 01 திங்கட்கிழமை 18.09.2023 கதிர் 311

# நிறைவேற்று அதிகாரத்தாலேயே போரை முடிவுறுத்த முடிந்தது

### ஜே.ஆர்.ஜெவர்த்தனவின் பேரன் பெருமிதம்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் காரணமாகவே வடக்கில் போரை முடிவுக்குக் கொண்டுவர முடிந்தது என்று தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெவர்த்தனவின் மூத்த பேரனும் ஜே.ஆர்.நிலையநிர்வாகசபைஉறுப்பினருமான பிரதீப் ஜெயவர்தன, .

இன்று நாட்டில் நிலவும் பல பிரச்சினைகளுக்கு தற்போதைய ஆட்சியினால் தீர்வுகளை வழங்க முடிந்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் துணிச்சலான தீர்மானங்களை நாம் பாராட்டுகின்றோம்.

நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வேலைத் திட்டத்திற்கு நாம் பூரண ஆதரவளிக்கிறோம். எனவே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு ஜனாதிபதிக்கு அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காக அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்திற்குச்சென்றுள்ளார். கியூபாவில் சீனா சார்பாக நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருந்த அவர், அங்கிருந்து நேரடியாக அமெரிக்கா பயணமானார்.

இந்தப்பயணத்தின்போதுஅமெரிக்க அதிபர் ஜோ பைடனைச் ஜனாதிபதி சந்தித்துப் பேச கடும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால்கடைசிவரை அந்தச் சந்திப்புக்கு அமெரிக்கா நேரம் ஒதுக்கவில்லை என்று ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தொடக்கத்தில் அமெரிக்கத் தரப்பிலிருந்து இந்தச் சந்திப்புக்குச் சாதகமான சமிக்ஞைகள் கிடைத்தாலும் ☞2

# நியூயோர்க் நகரை சென்றடைந்தார் ஜனாதிபதி

கியூபாவில் நடைபெற்ற 'ஜி77-சீனா' அரச தலைவர்கள் உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட பின்னர், அமெரிக்காவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கஇலங்கை நேரப்படி நேற்று அதிகாலை அமெரிக்காவின் நியூயோர்க் ☞2

# ஜே.ஆரின் கொள்கையை தொடர்ந்திருந்தால் நாடு இன்று அபிவிருத்தி அடைந்திருக்கும்

### அவரது நினைவுநாளில் ஜனாதிபதி செய்தி

முன்னாள்ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன, 1977 ஆம் ஆண்டு தொடங்கிய சமூக பொருளாதார கொள்கைகளை அவ்வண்ணமே முன்னோக்கி கொண்டு சென்றிருந்தால் இலங்கை இன்று அபிவிருத்தி அடைந்த நாடாகியிருக்கும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கதெரிவித்தார்.

ஜே.ஆர் .ஜெயவர்தனவின் 117 ஆவது பிறந்தநாள் நிகழ்வையொட்டி விடுத்துள்ள விசேட செய்தியிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கியநாடுகள்சபை மனித உரிமைகள் பேரவையின் 78ஆவது அமர்வில் பங்கேற்க அமெரிக்காவிற்குச் சென்றுள்ள ஜனாதிபதி அங்கிருந்து, இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் ☞2

# இனவாதத் தீ நீறுபூத்த நெருப்பாக இன்னமும்கூட கனன்றெரிகின்றது

### திருமலைச் சம்பவம் அதற்கு உதாரணம் சிறீதரன் எம்.பி. அறிக்கையில் தெரிவிப்பு

தியாகதீபம்திலீபனின் திருவுருவப்படம்தாங்கிய நினைவேந்தல் ஊர்தி மீது, திருகோணமலை கப்பற்துறையருகே மேற்கொண்டுள்ள மிலேச்சத்தனமான தாக்குதல், இந்த நாட்டில் இனவாதத்தீ நீறுபூத்த நெருப்பாகவே இன்னமும் கனன்றெரிகிறது என்பதை இன்னுமொருமுறைநிரூபணம் செய்திருக்கிறது என்று இலங்கைதமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியின் ஏற்பாட்டில் பொத்துவில் இருந்து தொடங்கிய தியாகிதிலீபனின்நினைவு ஊர்த்திப்பயணத்தின்மீது திருகோணமலையில் சிங்களவர்களால் ☞2

### நீதியை நிலைநாட்டாமைக்காக

# நாட்டின் தலைவர்கள் வெட்கப்படவேண்டும்

### பேராயர் மல்கம் ரஞ்சித் காட்டம்

விசாரணைக்குழுக்களை மீண்டும் மீண்டும் நியமிப்பதால் பயனில்லை. என்பதை நாட்டின் தலைவர்கள் உணர்ந்து நீதி நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்காமைக்காக வெட்கப்படவேண்டும் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

களுத்துறை கலவெல தேவாலயத்தில் நேற்று நடைபெற்ற பெற்ற சமயவழிபாட்டு நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பவத்தின் போது உயிரிழந்த 273 பேருக்காக நான் இந்த விடயத்தை கூற வேண்டியுள்ளது. தற்பொழுது சனல்-4 என்கின்றஊடகத்தினால் வெளியிடப்பட்டஉயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமானகாணொலி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க உள்ளதாகஇந்தநாட்டின் தலைவர் தெரிவித்து, அதற்காக ஓய்வு ☞2

# கிழக்கு பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டனம்

திருகோணமலையில் தியாகதீபம் திலீபன் ஊர்திப் பவனி மீது ''சிங்களக் காடையர் குழுவின் திட்டமிட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை'' கிழக்குப்பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளது.

''சாதரண எங்கள் நினைவேந்தலைக்கூட செய்ய முடியாத இந்த துர்பாக்கிய ☞8

# தென்சீன கடல்வலய மாநாடு 2ஆவது அமர்வு இலங்கையில்

தென் சீனா கடல் வலய 8 ஆவது அமர்வு வட்டமேசை மாநாடு எதிர்வரும் ஒக்டோபர் 24, 25 மற்றும் 26ஆம் திகதிகளில்இலங்கையில் நடைபெறும்.

இந்த மாநாடு கொழும்புஹுனுபிட்டிய கங்காராம விகாரையினால் நடத்தப்பட இருப்பதோடு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ☞2

# திலீபனின் நினைவூர்தி மீது கடைத்தனமான தாக்குதல்

### நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனும் தாக்கப்பட்டார்

தியாகி திலீபனின் நினைவுநாளையொட்டி பொத்துவில் முதல் யாழ்ப்பாணம் வரை ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த நினைவு ஊர்தியின் மீது திருகோணமலையில் சிங்களவர்கள் நேற்று காடைத்தனமாகத் தாக்குதல் நடத்தினர். ஊர்திப் பவனியில் இணைந்திருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதும் அவர்கள் ☞2

# ஏற்றுக்கொள்ள முடியாத காட்டுமிராண்டிதனம்

### யாழ். நகர முன்னாள் முதல்வர் கண்டனம்

தியாகதீபம்திலீபனின் உருவப்படத்தைதாங்கிய வாகன ஊர்தியை பொலிஸார் வேடிக்கை பார்க்க சிங்கள காடையர்கள் தாக்கி சேதப்படுத்தியமையும் அவ்வாகன அணியோடு வந்த நாடாளு மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் தாக்கப்பட்டமையும் ஏற்றுக்கொள்ள முடியாத காட்டுமிராண்டிதனம் என யாழ் மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த ஈனச்செயலை வன்மையாக கண்டிக்கின்றேன்.

உண்ணா நோன்பிருந்து அகிம்சை போர் தொடுத்து ஈகச்சாவடைந்த ☞2

# யாழ், மட்டு அரச வைத்தியசாலைகளிலும் ஸ்கான் சோதனை நிறுத்தப்படும் அபாயம்

### அரச அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர் சங்கம் அறிவிப்பு

கதிரியக்கத்தொழில்நுட்ப நிபுணர்கள் பற்றாக்குறை மற்றும் வெளிநாடுகளில் பணியாற்றிய சிலர் வெளியேறியமையினால் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உள்ளிட்ட பல மாவட்டங்களில் ஸ்கான் பரிசோதனை சேவைகள், இதய வடிகுழாய் பரிசோதனை மற்றும் அறுவை சிகிச்சை அறைகள், கதிர்வீச்சு பரிசோதனை சேவைகள் நிறுத்தப்படும் அபாயம் இருப்பதாக அரசு அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தலைவர் சானக தர்ம விக்ரம எச்சரித்துள்ளார்.

இந்த விடயம் சம்பந்தமாக அவர் மேலும்தெரிவித்ததாவது:

வைத்தியசாலைகளில் பயிற்சி பெற்ற நிபுணர்களின் கடுமையான பற்றாக்குறையால் பல வைத்தியசாலைகளில் சி.ரி, எம்.ஆர்.ஐ மற்றும்பெட் ஆகிய பரிசோதனைகள் நிறுத்தப்படவுள்ளன.

அதுமட்டுமன்றி, கதிரியக்கத்தொழில்நுட்ப நிபுணர்கள்பற்றாக்குறை மற்றும்வெளிநாடுகளில் பணியாற்றிய சிலர் வெளியேறியமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலை, கொழும்புரிட்ஜ்வே ☞2

# யாழ். பல்கலை மாணவர் ஒன்றியமும் கண்டனம்

தியாகதீபம் திலீபன் அண்ணாவின் நினைவேந்தல்வடக்கு-கிழக்கு தமிழர் தாயகமெங்கும் செப்டம்பர்15முதல்முதல் 26வரைதமிழ்மக்களால் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப் பட்டு வரும் நிலையில் தமிழ் அரசியல் கட்சி ஒன்றினால் நினைவேந்தலையொட்டிமுன்னெடுக்கப்பட்ட ஊர்திப் பவனியானது தமிழர் தலைநகர் திருகோணமலையில் சிங்கள அடிப்படை வாதக் குழுக்களினால் தாக்கப்பட்டமையினை யாழ்ப்பாணம்பல்கலைக்கழக மாணவர் மாணவர் ஒன்றியமும் கண்டித்துள்ளது.

உயிரிழந்த எதிரியைக்கூட புதிய மரியாதைகளோடு நடத்தவேண்டும் என்ற குறைந்தபட்ச மனித மாண் புகூட இன்றி அண்ணன் திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்தியானது தாக்கப்பட்டுள்ளமை நாகரீகம் அடைந்த இந்த சமுதாயத்தின் வெட்கக்க ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

போகப் போக நிலைமை மாறத் தொடங்கியுள்ளது. கடைசியில் சந்திப்பு இறுக்கமாக மறுக்கப்பட்டுள்ளது.

இதற்கான காரணம் குறித்து அமெரிக்கத் தரப்பிலிருந்து வெளிப்படையாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றாலும், ரணிலின் சீனச் சார்புப் போக்கும் ஜனநாயக ரீதியாகவும் அமைதியாகவும் இடம்பெற்று வந்த அரகலய போராட்டம் மீது ரணில் பதவிக்கு வந்ததும் இடம்பெற்ற தாக்குதலும் முக்கிய காரணங்கள் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. எந்தவொரு நட்பு நாட்டிலும் புதிய தலைவர் பதவியேற்றால் அவர்களை வரவேற்று வாழ்த்துச் சொல்வது அமெரிக்காவின் வழமை. ஆனால், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்ட பிறகு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இதுவரையில் அவருக்கு வாழ்த்துச் சொல்லவில்லை. ரணிலின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது.

ரணில் அமெரிக்கா செல்வதற்கு முன்னர் கியூபாவிற்குச் சென்றிருந்தார். அங்கு ஜி-77 பிளஸ் சீனா மாநாட்டில் அவர் கலந்துகொண்டிருந்தார். கியூபாவும் சீனாவும் மிக நெருக்கமான நாடுகள். இரண்டும் பொதுவுடமை (கமியூனிச) சித்தாந்தத்தை வரித்துக் கொண்டவையாக அறிவித்துள்ள நாடுகள். அமெரிக்காவுக்குக் குடைச்சல்கொடுக்கும் நாடுகள். அத்தகைய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்டு விட்டே ரணில் அமெரிக்கா பயணமாகினார். இந்த மாநாட்டில் பல நாடுகள் கலந்துகொள்ளவில்லை. அமெரிக்காவின் கோபத்திற்கு ஆளாக வேண்டாம் என்கிற காரணத்தாலேயே அந்த நாடுகள் ஜி-77 மாநாட்டைத் தவிர்த்து விட்டன என்று சொல்லப்படுகின்றது. அத்தகைய மாநாட்டில் கலந்துகொண்டு, அணிசேராக் கொள்கை என்கிற பெயரில் சீனா ஆதரவைக் காண்பிக்கும் ரணில், அமெரிக்காவுடனும் நட்புரிமை பாராட்டுவதாகப் பறைசாற்றுவதற்கு இடமளிக்க வோஷிங்ரன் தயாராக இல்லை என்கிற செய்தியையே அதிபர் பைடனுடனான சந்திப்புக்கு இடமளிக்காததன் மூலம் அமெரிக்கா உணர்த்தியுள்ளது என்கி றார்கள்.

நியூயோர்க்கில் அமெரிக்க அதிபரைச் சந்திக்காவிட்டால் என்ன, அங்கு வரும் ஏனைய நாட்டுத் தலைவர்களைப் பக்க நிகழ்வாகச் சந்தித்துப் பேசி படம் எடுத்து பத்திரிகையில் போட்டு உலகத் தலைவர்களிடம் ரணிலுக்குப் பலத்த ஆதரவு இருக்கின்றது என்று காட்டுவதற்கான முயற்சிகளில் படு மும்முரமாக இறங்கியிருக்கின்றது அவரது அணி. அடுத்தடுத்த நாட்களில் அந்தப் படங்களைப் பார்க்கும் பாக்கியம் இலங்கை மக்களுக்குக் கிடைக்கும்.

ரணில் கியூபா புறப்படுவதற்கு முன்பாக பொது ஜன பெரமுனவின் நிறுவுனர் என்று சொல்லப்படும் பஸில் ராஜபக்சவை சந்தித்துப் பேசிவிட்டுத்தான் புறப்பட்டார். அதுதொடர்பான தகவல்களை நாளை தருகின்றேன்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நிறைவேற்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.ஆர்ஜயவர்தனவின் 117 ஆவது பிறந்த நாள் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அந்த நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய தெரிவித்ததாவது:

கட்சி சார்பற்ற நபராக இந்த நிகழ்வில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். நட்டத்தில் இயங்கும் பொது நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்படவேண்டும் என்ற கருத்தை ஜே.ஆர். ஜெயவர்தன முன்வைத்தார்.

அரச நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் இணைந்து செயல்படவேண்டும் என்ற கருத்தையும் அவர் கொண்டிருந்தார். இதன் மூலம், நாட்டின் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதே அவரது நோக்கமாக இருந்தது. இந்தக் கூட்டு முயற்சிகளால்தான் இன்று சீனா பொருளாதார ரீதியாக வலுவாக உள்ளது.

ஜே.ஆர்.ஜெயவர்தன ஒரு முடிவை எடுத்தால், அந்த முடிவை மாற்றமாட்டார். அதை மாற்றினால், அது மக்கள் நல ஆட்சியை உருவாக்க மட்டுமே செய்யப்பட்டது.

அவருடைய ஆட்சியின் போது அவருடன் ஒரு நல்ல இளைஞர் கூட்டம் இருந்தது. இளைஞர்களுக்கு வாய்ப்பையும் அதிகாரத்தையும் கொடுத்தார். தற்போதைய அரசியல் தலைவர்களுக்கு ஜே.ஆர். ஒரு சிறந்த முன்மாதிரி - என்றார்.

## இனவாதத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடத்தப்பட்டதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இருநாட்டு அரசுகளின் கவனத்தையும், ஈழத்தமிழர்களுக்கான அடிப்படை நியாயத்தையும் கோரி 36 ஆண்டுகளின் முன்னர் அகிம்சைப் போராட்டம் நடாத்திய, திலீபன் என்கிற தியாகியின் உருவப்படத்துக்கும், அதைத்தாங்கிய ஊர்திக்கும், அவ்வூர்தியோடு இணைந்து பயணித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனுக்கும் இந்த நிலை என்றால், எந்தவித நியாயப்பாடுகளும் மற்று இத்தனை ஆவேசமாய் இனவாதத்தைக் கக்கும் சிங்களவர்களோடு, இந்த நாட்டில் தமிழர்கள் இணைந்து வாழ்வது எத்தனை தூரம் சாத்தியமானது என்பது பற்றி, இனிமேலேனும் சர்வதேச சமூகம் தனது கவனத்தைச் செலுத்தவேண்டும்.

ஜெனிவா அமர்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சமநேரத்தில், தமிழர்களையும், அவர்களது போரின் நியாயத்தையும், இனத்துக்காக நிகழ்த்தப்பட்ட தியாகத்தையும் காலில் போட்டு மிதித்து, தங்களது அடக்குமுறை மனோபாவத்தை சிங்கக்கொடிகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ள சிங்களக் காடையர்களது செயல் கடும் கண்டனத்துக்குரியது.

தமிழர்களது உணர்வுநிலைகள் குறித்தும், அவர்களது சுயாதீன உரித்துகள் குறித்தும் எப்போதும் கள்ளமௌனம் காக்கும் ஆட்சி அதிகாரபீடங்கள், இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என நாம் துளியும் எதிர்பார்க்கவில்லை.

இருந்தபோதும், ஒரு சுதேசிய இனத்தின் அடிப்படை உணர்வுநிலைகளை வலிந்து சீண்டி, இரு இனங்களுக்குமிடையிலான முரண்நிலைகளை மீண்டும் மீண்டும் கொதிநிலைக்குத் தள்ளி அரசியல் லாபம் ஈட்டும் சக்திகள் இனங்காணப்படவேண்டும்.

ஈழத்தமிழர்களது தன்னாட்சிக் கோரிக்கை நியாயபூர்வமானது என்ற செய்தியை சர்வதேச சமூகத்தின் செவிகளில் அறைகூவல் செய்வதற்கு இந்தச் சம்பவம் ஓர் சாட்சியமாய் அமைந்திருக்கிறது.

இதன் விளைவென்பது, எமது மக்களிடத்தே இனம் குறித்த ஓர்மத்தை தணியாது தகிக்கச் செய்துகொண்டே இருக்கும் என்பதை சிங்களவர்களும் உணரும் காலமொன்று உருவாகியே தீரும் -என்றுள்ளது.

## திலீபனின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடத்தினர். சிறீ லங்காப் பொலிஸார் முன்பாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றபோதும், அதனைத் தடுத்து நிறுத்த அவர்கள் தவறியிருந்தனர்.

பொத்துவிலில் இருந்து புறப்பட்ட தியாகி திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்தி, சனிக்கிழமை மட்டக்களப்பை அடைந்தது. அங்கிருந்து வாகரையூடாகத் திருகோணமலை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது சேருவெல என்கிற சிங்களப் பகுதியில் வைத்து ஊர்தி மீது தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. ஊர்திப் பவனி மீது கல்வீசித் தாக்குவதற்கு சிங்களக் காடையர்கள் தயாராகியுள்ளார்கள் என்ற தகவல் கிடைத்த நிலையில், வெருகல் தாண்டிப் பயணிக்க முடியாத ஆபத்தான நிலையில் ஊர்தி இரவு வெருகலிலேயே ஊர்தி தரித்து நின்றது.

நேற்றுக் காலையில் வெருகலில் இருந்து ஊர்தி புறப்பட்ட நிலையில் சேருவெல பகுதியில் வைத்து சிங்கக் கொடியுடன் வந்த சிங்களவர்கள் பலர் ஊர்தி மீது தாக்குதல் நடத்தினர். தடிகள், கொட்டன்களால் வாகனத்தைத் தாக்கியதுடன் கற்களையும் எடுத்து அதன் மீது வீசினர். ஊர்தியில் பயணித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனையும் வாகனத்திலிருந்து இறக்கி மிலேச்சத்தனமாகத் தாக்கினர்.

சனிக்கிழமை காலையில் களுவாஞ்சிக் குடியில் வணக்க நிகழ்வுகள் தொடங்கிய இடத்திலிருந்து அரச புலனாய்வாளர்கள் ஊர்தியைப் பின்தொடர்ந்துகொண்டிருந்தார்கள் என்றும் அவர்களின் ஏற்பாட்டிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

வழியில் காத்தான்குடியில் ஆர்ப்பாட்டம் நடைபெறுமென தகவல் பரவிய நிலையில் அப்படியே நடந்தது. களுவாஞ்சிக்குடியிலிருந்து படுவான்கரையூடாக பயணித்த வாகனத்தை உளவுத்துறையினர் பின்தொடர்ந்து கொண்டேயிருந்தார்கள்.

அவர்களது சமிக்கையுடன் செயற்பட்ட ஒரு குழுவினர் மொறக்கொட்டான்சேனை இராணுவ முகாமுக்கு அருகாமையில் நின்று சிங்கக் கொடிகளை ஏந்திய வாறு வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள் அதனைக் கடந்து சென்றபோது வாழைச்சேனை சந்திக்கு அண்மையில் நின்ற ஒரு குழுவினர் பனர்கள் போஸ்டர்களைத் தாங்கியவாறு மாலை 6.30 மணியளவில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள் என்றும் முன்னணியினர் தெரிவித்தனர்.

அவ்விடத்தைக் கடந்து ஊர்தி பயணித்துக் கொண்டிருந்தபோது அதே குழுவினர் பட்டா ரக வாகனமொன்றில் ஏறி ஊர்தியை முந்திச் சென்று நாவலடியிலுள்ள பொலன்னறுவை-வாகரை - மட்டக்கப்பு சந்தியில் இறங்கி வீதிக்குக் குறுக்காக பனர்கள் போஸ்டர்களை பிடித்தவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

அந்த இடத்தைக் கடந்தும் ஊர்தி வாகரை நோக்கிப் பயணித்தபோது குறித்த அதே குழுவினர் அதே வாகனத்தில் ஏறி ஊர்தியைப் பின்தொடர்ந்தார்கள். ஊர்தி வாகரை மாவீரர் துயிலுமில்லம் முன்பாக தரித்து நின்றபோது ஊர்தியைக் கடந்து சென்றிருக்கிறார்கள்.

தொடர்ந்து ஊர்தி திருகோணமலை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது சேருவெலவில் காடையர்குழு தாக்குதல் நடாத்தவுள்ளதாக கிடைத்த தகவலின் காரணமாக ஊர்தியும் அதில் பயணித்தவர்களும் அச்சுறுத்தலான நிலையில் வெருகலைத் தாண்டிப் பயணிக்க முடியாது அங்கேயே தரித்து நின்றனர். பின்னர் நேற்றுக் காலை அங்கிருந்து புறப்பட்ட நிலையிலேயே ஊர்தி மீது நாடாளுமன் உறுப்பினர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலை அடுத்து ஊர்தி அந்த இடத்திலிருந்திலிருந்து முன்னேறமுடியாத நிலையில் திரும்பிச் சென்றது.

## நாட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவருடைய தலைமையில் மூவர் கொண்ட குழு ஒன்றை அமைத்திருக்கிறார்.

இந்தக் குழுவை நியமித்த நாட்டின் தலைவரிடத்தில் நான் ஒரு கேள்வியை கேட்க விரும்புகிறேன். அன்று அவர் பிரதமராக இருந்தபொழுது அவருக்கு விரும்பியவர்களை கொண்ட நாடாளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அந்தத் தெரிவுக்குழு அறிக்கையை வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

ஆகவே இந்த நாட்டின் தலைவர்கள் நடந்துகொள்ளுகின்ற விதம் சம்பந்தமான சட்டமொன்று இருக்கவேண்டும். தலைவர்கள் இவ்வாறு காலத்திற்கு காலம் மாறுபட்டு நடந்துகொள்வது வெட்கக்கேடானது. தற்போது விசாரணைக்காகக் குழு ஒன்றை நியமிக்க முடியும். எதிர்காலத்திலும் சில குழுக்களை விசாரணைக்காக அவர் நியமிக்கலாம். ஆனால் இந்தக் குழுவினால் நாட்டில் நீதி என்கின்ற விடயம் நடைமுறைக்குச் சாத்தியப்படாது என்பது நமக்கு தெரியும். குழுக்களை நியமிப்பதால் காலம் கடத்தப்படும் என்பதையும் நாம் அறிவோம்.

ஏற்கனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட குழுக்கள் மூலம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, அறிக்கைகள் தயாரிகப் பட்டுள்ள நிலையில் அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றால் ஒருபோதும் எடுக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் தற்போது ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. எதிர்வரும் நாட்களில் மற்றுமொரு குழுவும் நியமிக்கப்படவிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தக் குழுக்கள் மூலம் எவ்விதமான முன்னேற்றங்களும் காணப்படப் போவதில்லை என்பது எமக்கு புலப்படுகின்றது.

நாட்டின் தலைவர் இந்தக் குழுக்களை நியமித்துவிட்டு நாங்கள் நடவடிக்கைகளை எடுக்கிறோம் என்று உலகம் பூராகவும் சுற்றி திரிந்து தம்பட்டம் அடிப்பதால் எவ்விதமான பயனும் இல்லை. தலைவர்கள் நாட்டு மக்களின் உயிர்களுக்குப் பொறுப்பானவர்கள். இந்த நாட்டில் ஒரு பொது மகனின் உயிர் பறிக்கப்பட்டாலும் அதற்குப் பொறுப்பு கூறவேண்டிய கடமை தலைவர்களுக்கு உள்ளது. ஆனால் இலங்கையில் அவ்விதமாக நடைபெறவில்லை.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை சம்பந்தமாக சனல்-4 காணொளியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ஆனால் இதுவரையில் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதேபோல ஜோசப்பரராஜசிங்கத்தினுடைய சாவு சம்பந்தமாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. எவருமே நீதியின் முன்னால் நிறுத்தப்படவில்லை. இதேபோன்றுதான் கடந்த காலத்தில் எத்தனையோ பேர் உயிரிழந்திருக்கிறார்கள். அவர்கள் தொடர்பில் எவ்விதமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டாலும் யாரும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

இவ்வாறான நிலைதான் 273 பேருக்கும் காணப்பட போகின்றது என்பது எமக்குக் புரிகிறது. ஆகவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் சம்பந்தமாக ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் குழுக்களை நியமிப்பதால் எவ்விதமான பயன்களும் இல்லை என்பதே எமது நிலைப்பாடாகும் -என்றார்.

## தென்சீன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடக்க நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்த வட்டமேசை மாநாட்டின் பூர்வாங்க ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகரும், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்கவின் தலைமையில் நடைபெற்றது.

சீனாவின் அமர்வு வட்டமேசை மாநாடு வருடாந்தம் நடைபெற்று வருகிறது. ஒற்றுமையுடன் ஒன்றாக பயணித்து பட்டுப்பாதையின் ஞானத்தைப் பெறுவோம் என்ற தொனிப்பொருளின் கீழ் 22 நாடுகளின் பங்கேற்புடன் இம்முறை இந்த மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளது.

மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்காக தொடர்புடைய அரச நிறுவனங்களின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் குறித்து கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

பௌத்த மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பௌத்த மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட தொடர்புள்ள அரச நிறுவன அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றார்கள்.

## யாழ், மட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவர் வைத்தியசாலை, பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலை, மஹாநுவர போதனா வைத்தியசாலை, கராப்பிட்டி, அனுராதபுரம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, இரத்தினபுரி, பதுளை கேகாலை மற்றும் பொலன்னறுவை ஆகிய வைத்தியசாலைகளில் பரிசோதனைகள் நிறுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுக்காது விட்டால் பெரும் நெருக்கடிகள் ஏற்படும் ஆபத்து உள்ளது - என்றார்.

## நியூயோர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகரைச் சென்றடைந்தார்.

'2030 நிகழ்ச்சி நிரலுக்கான அமைதி, சுபீட்சம், முன்னேற்றம் மற்றும் நிலைபேற்றுத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை மீண்டும் உருவாக்குதல்' என்ற தொனிப்பொருளின் கீழ் செப்டம்பர் 18 முதல் 21 வரை இம்முறை ஐ.நா. பொதுக் கூட்டத் தொடர் நடைபெறும். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, செப்டெம்பர் 21 கூட்டத்தொடரில் பங்கேற்று, உரையாற்றவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடருக்கு இணையாக செப்டம்பர் 18 நடைபெறவுள்ள, 2030 ஆம் ஆண்டிற்கான மாற்றம் மற்றும் விரைவான நடவடிக்கைகள் என்பவற்றுக்காக உலக தலைவர்களினால் வழிகாட்டுதல்கள் வழங்கப்படும் 2023 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உச்சி மாநாட்டின் அரச தலைவர்கள் சந்திப்பிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

ஜனாதிபதி, மாநாட்டின் பக்க நிகழ்வுகளாக உச்சி மாநாட்டில் பங்கேற்க நியூயோர்க் வரும் பல அரச தலைவர்களுடன் இருதரப்புக் கலந்துரையாடல்களையும் நடத்தவுள்ளார். கடல்சார் நாடுகளுக்கான ஆசிய-பசுபிக் தீவு நாடுகள் கலந்துரையாடலிலும் பங்கேற்கவுள்ளார்.

## ஏற்றுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தமனை நினைவுகூரக்கூட இந்த மண்ணில் அனுமதி இல்லை என்பதை இது காட்டி நிற்கின்றது. இச்செயல் இந்த நாட்டில் ஒருபோதும் நல்லிணக்கம் சாத்தியம் இல்லை என்பதையும் தமிழ் மக்கள் இந்த மண்ணில் நிம்மதியாக வாழ அனுமதிக்கப்படப் போவதில்லை என்பதையும் பட்டவர்த்தனமாக காட்டுகின்றது. இதனை சர்வதேசம் கண்டும் காணாதிருப்பதுதான் வேதனையானது - என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜே.ஆரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையை ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர், பீ.மும்முல்லகே ஜே.ஆரின் பிறந்த நாள் நிகழ்வில் வாசித்தார்.

ஜே.ஆர்.ஜெயவர்தன இந்நாட்டில் சமூக பொருளாதாரத்தில் புரட்சியை ஏற்படுத்திய

தொடர்ச்சி 8ம் பக்கம்...

காலைக்கதிர்
Kalaikkathir

# வடக்கு, கிழக்கில் தொடரும் தீவிர பௌத்தமயமாக்கல் இனங்களுக்கிடையான வன்முறையாக மாற்றமடையலாம்!

## 6 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் கூட்டாக எச்சரிக்கை

தமிழ்மக்கள் செறிந்துவாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல இடங்களில் இடம்பெற்றுவரும் தீவிர பௌத்தமயமாக்கலை ஆவணப்படுத்துவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் தவறியிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள், அரச கட்டமைப்புக்களின் ஆதர வுடன் சட்டவிரோதமாக முன்னெடுக்கப்பட்டுவரும் இத்தகைய நடவடிக்கைகள் இனங்களுக்கு இடையிலான வன்முறையாக நிலைமாற்றமடையக்கூடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளன.

ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் எழுத்துமூல அறிக்கை தொடர்பான தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், பிரித்தானிய தமிழர் பேரவை, அயர்லாந்து தமிழர் பேரவை, அமைதி மற்றும் நீதிக்கான ஒருங்கிணைப்புக்குழு, சுவிற்ஸர்லாந்து தமிழ் நடவடிக்கைக்குழு மற்றும் அமெரிக்க தமிழ் நடவடிக்கைக்குழு ஆகிய 6 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே மேற்குறிப்பிடப்பட்டவாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு -

இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் நிலவும் குறைபாடு மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு உகந்த சூழல் இன்மை என்பவற்றை அடிக்கோடிட்டுக்காண்பித்து ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் கடந்த 6 ஆம் திகதி இலங் கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான எழுத்து மூல அறிக்கையை வெளியிட்டுள்ளார். உயர்ஸ்தானிகரின் அறிக்கையை வரவேற்கும் அதேவேளை, அதில் உள்ளடக்கப்படவேண்டிய மேலும் சில விடயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

'இலங்கையில் அனைத்து மட்டங்களிலும் நிலவும் பொறுப்புக் கூறல்சார் குறைபாடு நாட்டின் அடிப்படை மனித உரிமை பிரச்சினையாகக்காணப்படுகின்றது' என்று உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயத்தை முழுமையாக ஏற்றுக்கொள்வதுடன், சிங்கள பௌத்த தேசியவாதத்தின் விளைவாக மட்டுமீறிய அளவில் மத்தியமயப்படுத்தப்பட்ட அதிகாரங்களே அடிப்படை அரசியல் பிரச்சினையாக உள்ளன என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

அதேபோன்று உண்மை, பொறுப்புக்கூறல், இழப்பீடு மற்றும் மீள்நிகழாமையை உறுதிப்படுத்தல் ஆகிய கூறுகளை ஒன்றிணைக்கும் வகையில் நிலைமாறுகால நீதிப்பொறிமுறையொன்றை ஸ்தாபிக்குமாறும், அப்பொறிமுறையில் பாதிக்கப்பட்ட தரப்பினரின் பங்கேற்பு உறுதிப்படுத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கதாகும். இருப்பினும் தேசிய இனப்பிரச்சி னைக்கான அரசியல் தீர்வு வழங் கப்படவேண்டியதன் அவசியம் குறித்து உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

அதேவேளை பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதில் அடையப்பட்டுள்ள தோல்வி மற்றும் அச்சட்டத்தின் தொடர்ச்சியான பயன்பாடு என்பன குறித்து உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் தீவிர கரிசனை வெளியிடப்பட்டிருப்பதுடன் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தின் குறைபாடுகள் தொடர்பில் ஐ.நா. விசேட அறிக்கையாளர்கள் 10 பேரின் கூட்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இருப்பினும் பௌத்த விகாரைகளை நிர்மாணித்தல், இந்துக்களின் வணக்கத்தலங்களை அழித்தல், இந்துக்கள் வழிபாடுகளில் ஈடுபடுவதைத் தடுத்தல் என்பன உள்ளடங்கலாக தமிழ்மக்கள் செறிந்துவாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல இடங்களில் இடம்பெற்றுவரும் தீவிர பௌத்தமயமாக்கலை ஆவணப்படுத்துவதற்கு உயர்ஸ்தானிகர் அலுவலகம் தவறியிருக்கின்றது. அரச கட்டமைப்புக்களின் ஆதரவுடன் சட்டவிரோதமாக முன்னெடுக் கப்பட்டுவரும் இத்தகைய நட வடிக்கைகள் இனங்களுக்கு இடையிலான வன்முறையாக நிலைமாற்றமடையக்கூடிய அச் சுறுத்தல் காணப்படுகின்றது.

பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவமயமாக்கம் முடிவுக்குக்கொண்டுவரப்படவேண்டியதன் அவசியம் என்பன தொடர்பில் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ள போதிலும், உண்மையில் அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. அதுமாத்திரமன்றி வடக்கு, கிழக்கு மக்கள் தொடர்ந்தும் மட்டுமீறிய இராணுவப் பிரசன்னத்துக்கு மத்தியிலேயே வாழ்ந்துவருகின்றனர்.

மேலும், உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விசாரணை செயன்முறைகளுக்கு அப்பால் குமுதினி படகு படுகொலைகள் (1985), சத்துருக்கொண்டான் படுகொலைகள் (1990), குமாரபுரம் படுகொலைகள் (1996), 1983 கறுப்பு ஜுலை கலவரங்கள், பாடசாலைகள், தேவாலயங்கள் மற்றும் கோயில்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல்கள் என்பன தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறையை வழிநடத்தும் குழு ஆகியவற்றிடம் வேண்டுகோள்விடுக்கின்றோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(05)

# 13ஐ நடைமுறைப்படுத்த வேண்டியதன் தேவை ஜனாதிபதி ரணிலுக்கு உள்ளது

## சந்திரிக்கா கூறுகிறார்



13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறே தமிழ் தலைவர்கள் கோருகிறார்கள். தற்போது 13 ஐ நிறைவேற்ற வேண்டும் என ஜனாதிபதி கூறுகிறார்.

அது மிகப்பெரிய விடயமல்லவா? எனது நிலைப்பாட்டை கடுகளவேனும் மாற்றவில்லை. அவர் மாறியுள்ளார். 13 ஐ நடைமுறைப்படுத்த வேண்டிய உண்மையான தேவை ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது.

இது தொடர்பில் சிறந்த புரிந்துணர்வும் அவருக்கு உள்ளது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

இந்த பிரச்சினை தொடர்பில் நான் பேச வேண்டும். எனது வாழ்வில் இந்த பிரச்சினைக்காக பாரியளவில் அர்பணித்துள்ளேன். இந்த விடயம் தொடர்பில் என்னை கொலை செய்தும் இருப்பார்கள்.

அரசமைப்பின் சட்டமாக காணப்படும் 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறே தற்போது ஜனநாயக முறையில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தலைவர்கள் கோருகிறார்கள். இருப்பினும் இதனை ஒரு புறம் தள்ளி வைத்துள்ளனர். அதனை ஏன் செயல்படுத்த முடியாது?

13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் சில விடயங்கள் உள்ளன. அதனை நடைமுறைப்படுத்த விரும்புவதாக ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் என்னிடமும் கேட்டுக்கொண்டார்.

அதற்கு எந்த ஓர் ஒத்துழைப்புகளையும் வழங்குவதற்கு நான் தயார் எனக் கூறினேன். எனினும் அதனை தற்போது யார் நடைமுறைப்படுத்துவது? அனைத்து மாகாண சபைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த வடக்கு, கிழக்கில் குறைந்தது மாகாண சபைகளாவது இருக்க வேண்டும். அதற்கு முதலில் மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும். அதனை ஏன் நடத்த முடியாது?

வடக்கு, கிழக்கில் மாகாண சபை தேர்தலை நடத்தினால் ஏனைய பகுதிகளிலும் சத்தமிடுவார்கள். 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தி இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தற்போதைய நிலைமை போன்று இலகுவான சந்தர்ப்பம் இருக்காது.

படிப்படியாக வந்து நான் செய்ய முற்பட்டது சரியானது என தற்போது மக்களுக்குப் புரிந்துள்ளது. இதற்கு அப்பால் சென்று புதிய அரசமைப்பு சட்டத்தை கொண்டு வந்தேன். இனப்பிரச்சினைக்கு முன்வைக்கப்பட்ட முக்கிய தீர்வு அது என முழு உலகமும் கூறுகிறது. 2/3 பெரும்பான்மையை பெற 7 வாக்குகளே அன்று போதாமல் போனது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அந்த 7 வாக்குகளை வழங்கவில்லை. நான் அதனை பலவந்தமாகக் கொண்டு வர வில்லை.

அவர்களுடன் 5 மாதங்கள் கலந்துரையாடியே கொண்டு வந்தேன். கலந்துரையாடி இணங்கியே பிரதியை கொண்டு வந்தேன். அதற்கு வாக்களிக்கவில்லை.

அது மாத்திரமல்ல எனக்கு கூச்சலிட்டு, அதனை தீயிட்டு கொளுத்தினர். தற்போதாவது அதனை நிறைவேற்ற வேண்டும் என அவர் கூறுகிறார். அது மிகப்பெரிய விடயமல்லவா? எனது நிலைப்பாட்டை கடுகளவேனும் மாற்றவில்லை. அவர் மாறியுள்ளார். இது சிறந்த விடயம்.

போராட்டத்தால் பாரிய மாற்றம் ஏற்பட்டது. தொலைக்காட்சிகளில் அதனைப்பார்த்து நான் அழுதேன். அந்த இளைஞர், யுவதிகள் யாருமே கூறாமலும் சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்து மத மக்களும் ஒன்றிணைந்து போராடினார்கள்.

அங்கு ஒன்றாக சாப்பிடும் விதம், ஒருபோதும் இல்லாத அளவுக்கு முஸ்லிம் சமய தலைவர்கள், தேரர்கள் மற்றும் ஏனைய மத தலைவர்களை இணைத்து இஃப்தார் நிகழ்ச்சியில் கலந்து நோன்பு திறந்தனர். இது மிகப்பெரிய மாற்றமாகும்.

இதுவே தற்போது சிறந்த சந்தர்ப்பம். நானாக இருந்தால் மறுநாளே அதனைச் செய்திருப்பேன். 13 அல்ல அதற்கு அப்பால் சென்று தீர்மானம் எடுத்திருப்பேன். தற்போது அதனைச் செயற்படுத்த முடியும்.

13 ஐ நடைமுறைப்படுத்த வேண்டிய உண்மையான தேவை ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது. இது தொடர்பில் சிறந்த புரிந்துணர்வும் அவருக்கு உள்ளது.

சட்டத்துக்கு ஏற்ப அரசாங்கத்தின் பிரதானி என்ற வகையில் ஜனாதிபதியும் அரசாங்கத்தின் ஏனைய அங்கத்தவர்களும் இதனை நடைமுறைப்படுத்துமாறு குறித்த பிரிவுகளுக்கு கூற வேண்டும். அதிகாரிகளுக்கு கூற வேண்டும். அது சரியாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை பின்னர் அவதானிக்க வேண்டும். அதனை செயற்படுத்த மாகாண சபைகள் இருக்க வேண்டும். - என்றார். (05)

# கள்ள மணல் கடத்திய 2 ட்ராக்டர்கள் சிக்கின





கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குற்பட்ட கல்லாற்றுப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம் பெறுவதாக இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று சோதனை நடத்திய இராணுவத்தினர் கள்ள மணல் ஏற்றிய இரு உழவு இயந்திரங்களைக் கைப்பற்றினர்.

பிடிபட்ட இரு உழவியந்திரங்களிடமும் மணல் ஏற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் ஏதும் இருக்கவில்லை என்று படையினர் தெரிவித்தனர். அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்டு தர்மபுரம் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (113)

# பயணப் பொதியொன்றிலிருந்து சடலம் சீதுவை பகுதியில் மீட்பு

பயணப் பொதியொன்றில் இருந்து சடலமொன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சீதுவை தண்டுகம் ஓயாவிற்கு அருகில் பயணப் பொதியொன்றில் இருந்து குறித்த சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் ஆண் ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (05)

# யாழில் பொலிஸாரை தாக்கியவர் கைது!

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்து, பொலிஸ் உத்தியோகஸ்தரை தாக்கிய குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஆவரங்கால் பகுதியை சேர்ந்த நபர் ஒருவருக்கு எதிராக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைக்கு வருமாறு, குறித்த நபருக்கு பொலிஸார் அழைப்பு விடுத்த போதிலும், அவர் பொலிஸ் நிலையம் செல்லாததால், வியாழக்கிழமை குறித்த நபரை கைது செய்வதற்கு பருத்தித்துறை பொலிஸார், அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் நபரின் வீட்டுக்கு சென்றுள்ளனர். அதன் போது அவர் பொலிஸாருடன் முரண்பட்டு, பொலிஸாரை தாக்கியும் உள்ளார். அதனை அடுத்து அச்சுவேலி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, அச்சுவேலியில் இருந்து மேலதிக பொலிஸார் அங்கு விரைந்து, பருத்தித்துறை பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டவரை கைது செய்து. பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அச்சுவேலி மற்றும் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மிக மோசமான தாக்குதல் ஏற்கமுடியா முன்னுதாரணம்

தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தி மீது திருகோணமலையில் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் பொத்துவிலில் இருந்து புறப்பட்ட இந்த ஊர்திக்கு கிழக்கில் பல இடங்களிலும் எதிர்ப்புக் காட்டப்பட்ட பின்னர் திருகோணமலையில் தரைப்படை முகாமுக்கு நெருக்கமான பகுதியில் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரகுமார் மீதும் காவல்துறையினர் முன்பாகக் காடையர்கள் தாக்குதல் நடத்தியபோதும் அதனைத் தடுக்கவோ ஊர்தி மீதான தாக்குதலைத் தடுக்கவோ காவல்துறையினர் போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதை சம்பவம் தொடர்பான காணொலிகளில் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஊர்தி தாக்கப்பட்டதும் அதைத் தடுக்க காவல்துறையினர் போதியநடவடிக்கைஎடுக்காததும்கடும்கண்டனத்துக்குரியது. இந்தத்தாக்குதலைநடத்தியவர்கள்மீதும்அதனைத்தடுக்கத் தவறிய காவல்துறையினர் மீதும் உடனடியாக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இந்தத் தாக்குதலின் பின்னணியில் அரச படைகளின் புலனாய்வாளர்கள் என்று கூறப்படுவோர் இருந்தனர் என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பிலும் தீவிரமாக விசாரிக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்.

இந்த ஊர்திப் பவனி இந்த ஆண்டு முதல் தடவையாக இடம்பெறவில்லை. கடந்த ஆண்டும் அதற்கு முன்னரும்கூட இடம்பெற்றிருக்கின்றது. அப்போதெல்லாம் ஊர்திப் பவனிக்கு எதிர்ப்போ, அதன் மீது தாக்குதல்களோ இடம்பெறவில்லை. எனவே சிங்கள மக்கள் இந்த ஊர்திக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள் என்று ஒருபோதும் சொல்ல முடியாது.

இந்த ஆண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தையிட்டியிலும் திருகோணமலையிலும் குருந்தூர் மலையிலும் விகாரைகள் அமைக்கப்படுவதற்கு எதிராகப் போராட்டங்களை நடத்திய பின்னணியில்தான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனவே சிங்கள மக்களின் உணர்வுகளைச் சீண்டியதால் அவர்கள் கோபமடைந்து இவ்வாறான காரியத்தில் ஈடுபட்டார்கள் என்று ஒருபோதும் சொல்ல முடியாது. கடந்த காலங்களில் இல்லாத உணர்வுகள் இந்த ஆண்டில் மட்டும் சீறிப் பாய்வதற்கு எந்த நியாங்களும் இல்லை. இந்தத் தாக்குதல் திட்டமிட்ட பௌத்த, சிங்களப் பேரினவாத நிகழ்ச்சி நிரலின் கீழ் நடத்தப்பட்டது என்பது தெளிவாகின்றது.

30 வருடங்களுக்கு முன்னரும் இந்த நாட்டில் ஓர் உள்நாட்டுப் போரை – ஆயுத மோதலை – இந்த நிகழ்ச்சி நிரலே உருவாக்கியது. பௌத்த சிங்கள நிகழ்ச்சி நிரலை எதிர்ப்பவர்கள், கேள்விக்குட்படுத்துபவர்கள் தாக்கப்படுவார்கள், கொல்லப்படுவார்கள் என்கிற வரலாறும் மீண்டும் திரும்பத் தொடங்குகின்றது என்பதையே திருகோணமலைத்தாக்குதல்சம்பவம்உணர்த்திநிற்கின்றது. இது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

தியாகி திலீபன் அகிம்சைக்கே ஓர் எடுத்துக்காட்டு. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் வரித்துக்கொண்ட ஆயுதப் போராட்டக் கொள்கைக்கு முற்றிலும் மாறான அகிம்சையை ஆயுதமாக்கி மக்களின் உரிமையை வென்றெடுக்க முயன்ற மாமனிதன். ஒருவேளை அன்று அகிம்சை வென்றிருந்தால், இந்த நாட்டில் இத்தனை பெரிய குருதிச் சகதி ஏற்பட்டிருக்காமலேயேகூடப் போயிருக்கலாம். இத்தனை பெரிய மனிதப் பேரவலமும் பொருளாதாரச் சிதைவுகளும் ஏற்பட்டிருக்காமல் போயிருக்கலாம். அகிம்சைக்கு மதிப்பளிக்கப்படாததன் விளைவு நாடும் மக்களும் ஈடுசெய்ய முடியாத இழப்பக்களையும் அவலங்களையும் சுமக்க வேண்டியவர்களானார்.

இப்போது மீண்டும் அதே அகிம்சாவாதியை நினைவுகூர்வதைத் தடுத்து, நினைவு ஊர்தி மீது தாக்குதல் நடத்தி அச்சுறுத்தலை ஏற்படுத்துபவர்களைத் தண்டிக்காது விட்டால், இன்றைய ஆட்சியாளர்களும் அகிம்சையை புறக்கணிப்பவர்களாக, எதிர்காலச் சந்ததிகளுக்கும் அகிம்சை ஒரு போராட்ட வடிவமல்ல என்று கூறுவதாக அமைந்துவிடும். எனவே இந்த இடத்தில் ஆட்சியாளர்கள் மிகக் காத்திரமான நடவடிக்கை எடுத்து இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லை என்றால் இது மீண்டும் நாட்டின் எதிர்காலத்தைப் படுகுழியில் தள்ளிவிட்டுவிடும்.

# அரபு வசந்தமாக தொடங்கி முடிவின்றி தொடரும் போர்

## ஆதிக்க சக்திகளின் சுயநலனுக்காக பெரும் மனிதப் பேரழிவு

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**




துனிசியாவில் 2010ஆம் ஆண்டு அன்றைய ஆட்சியாளருக்கு எதிராக மல்லிகைப் புரட்சி என்ற பெரும் கிளர்ச்சி வெடித்தது. சுமார் 2 ஆண்டு காலம் தொடர்ந்த இந்தக் கிளர்ச்சி துனிசியாவில் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்தியது. இப்படியாக

ஆரம்பித்த அரபு வசந்தம்தான் அரபு நாடுகளையும், ஆபிரிக்க நாடுகளையும் தற்போதும் பதம் பார்த்து கொண்டிருக்கிறது.

### ஆட்டிப் படைக்கும் அரபு வசந்தம்

துனிசியாவில் தொடங்கிய இந்தக் கிளர்ச்சிதான் மத்திய கிழக்கு அரபு நாடுகளையும் வடக்கு ஆப்பிரிக்கா தேசங்களையும் 'அரபு வசந்தங்களாக' ஆட்டிப் படைத்தது. இதன்பின் எகிப்து, லிபியா, யேமனில் ஆட்சி மாற்றங்கள்

நிகழ்ந்தன. இதே அரபுவசந்தம்தான் அரபு, ஆப்பிரிக்க நாடுகளில் பேரழிவையும் விளைவித்துள்ளது.

இறுதியாக சிரியாவில் தொடங்கிய உள்நாட்டுப்போர் உலகப்போரைப்போல விஸ்வரூபமெடுத்து பெரும் அழிவைச் சந்தித்து நிற்கிறது. இந்த அரபு வசந்தத்தின் தாக்குதலுக்கு அல்ஜீரியா, ஈராக், ஜோர்டான், குவைத், மொராக்கோ மட்டுமல்ல சூடானும் தப்பவில்லை. சவூதி, ஓமன், மேற்கு சகாராவிலும் சாடையாக அரபு வசந்தம் எட்டிப் பார்த்து ஓய்ந்தது.



### அரபு வசந்தமும் -அதன் விளைவும்

அரபு வசந்தமும், அந்தப் போரின் விளைவுகளும் அந்த பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சியில் 600 பில்லியன் டாலருக்கு மேலான நஷ்டத்தை விளைவித்திருக்கிறது என்று ஐக்கிய நாடுகள் பொருளாதர அவையின் ஆய்வு தெரிவிக்கிறது.

2010 ஆம் ஆண்டு 'அரபு வசந்தம்' என்று கூறப்பட்ட எழுச்சி ஏற்படுவதற்கு முன்னர் மத்திய கிழக்கு நாடுகள் முழுவதும் இருந்த வளர்ச்சி கண்ணோட்டத்தை அடிப்படையாக வைத்து ஐக்கிய நாடுகள் அவையின் மேற்கு ஆசியாவுக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணையம் இந்த ஆய்வை மேற்கொண்டது.

அத்துடன் இந்தப் பிராந்திய நாடுகளின் தேசிய ஒட்டு மொத்த உற்பத்தியில் 6 சதவீதத்துக்கு இந்த இழப்பு சமம் என்று ஐநாவின் இந்த புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன. போர்களும், பாதுகாப்பின்மையும், சுற்றுலா துறையால் கிடைக்கின்ற வரவை பாதித்து, வெளிநாட்டு முதலீட்டையும் தடுத்து, கடன், வேலைவாய்ப்பின்மை மற்றும் ஊழல் போன்ற பொருளாதார பிரச்சனைகளை மோசமாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

### அமெரிக்காவின் சுயநலத்திற்கான போர்கள்

அரபு வசந்தத்தை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தங்களது ஆதாயத்துக்காகப் பயன்படுத்திக்கொண்டன என்பது வெளிப்படை. தாம் விரும்பிய நாடுகளில் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்துவதற்கான கருவியாக இந்த அரபு வசந்தம்

அமெரிக்காவுக்கு பேருதவியாக இருந்தது. கிளர்ச்சி குழுக்களுக்கு ஆயுத உதவியையும் தார்மீக ஆதரவையும் அமெரிக்கா அள்ளி வழங்கியது.

ஆனால்சிரியாவில்அமெரிக்காவின் இத்தகையநடவடிக்கைக்குமுற்றுப்புள்ளி வைத்தது ரஷ்யா. அமெரிக்கா ஆதரவு கிளர்ச்சிக் குழுக்களையும் ஐஎஸ் பயங்காரவாதங்களையும் ரஷ்யா தடுத்து நிறுத்தியது. சிரிய நாட்டுடன் ஈரானும் கை கோர்த்தது.

சிரியாவில் அரபு வசந்தம் என தொடங்கிய உள்நாட்டு யுத்தம் இப்போதும் தொடர்வது கவலைக்குரியதே. சிரியாவின் உள்நாட்டுப் போர், சர்வதேச நாடுகளின் தலையீட்டால் பாரியளவில் உயிர் இழப்புக்களை சந்தித்தது. ஆயினும் இப்போரின்

நிகழ்கால நிலவர உண்மையாக இப்போரில் எவரும் வெற்றியோ-தோல்வியோ அடையவில்லை என்பது வெளிப்படையான உண்மையாகும்.

### எகிப்தில் ஹொஸ்னி முபாரக் பதவி விலகல்

அரபு வசந்தம் எகிப்திலும் சனவரி 2011 முதல் தொடர்ந்து நிகழ்ந்தது. தெருப்போராட்டங்களையும் எதிர்ப்புகளையும் ஒத்துழையாமையையும் ஏற்படுத்தி, கடந்த 30 ஆண்டுகளாக பதவியில் இருந்த அதிபர் ஹொஸ்னி முபாரக்கின் பதவி விலகலை இலக்காகக் கொண்டு அதில் வெற்றியும் கண்டன.

எகிப்தில் காவல்துறையின் கொடுஞ்செயல்கள், நெருக்கடி நிலைச் சட்டங்கள், வேலையின்மை, குறைந்த ஊதியத்தைஉயர்த்தவேண்டியதேவை,

குடியிருப்பில்லாமை, உணவுப்பொருட்களின் விலை உயர்வு, அரசியல் ஊழல், பேச்சுரிமை மறுக்கப்படுதல், மோசமான வாழ்நிலை போன்ற காரணங்களுக்காக இந்தப் போராட்டங்கள் நடைபெற்றன.

2010-11 துனீசியா புரட்சியின் பின்னணியில் எகிப்திய பொதுமக்களிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி போராட்ட அமைப்பாளர்கள் முயன்று இறுதியில் வென்றனர். இறுதியாக 11 பெப்ரவரியில் அதிபர் முபாரக் முனைப்புடன் செயல்பட்ட பொதுமக்களின் எதிர்ப்புகளுக்கிடையே தமது பதவியிலிருந்து விலகினார்.



### யெமனிலும் போராட்டங்கள்

2011 யெமனிலும் இத்தகைய கிளர்ச்சி, துனீசியப் புரட்சியின் துவக்க காலத்திலேயே தொடங்கி பிற அரபுலக போராட்டங்களின் காலத்திலேயே இணையாக எழுந்தது. துவக்கத்தில் வேலையின்மை, பொருளாதாரநிலை, ஊழல் குறித்தே போராட்டங்கள் நடந்தன யெமன் நாட்டு அரசியலமைப்பை மாற்றும் அரசின் திட்டத்திற்கு எதிராகவும் போராட்டங்கள் நிகழ்ந்தன. எழுச்சியின்

உச்சகட்டமாக யெமன் தலைவர் அலி அப்துல்லா சாலேயின் பதவி விலக்கபோராட்டங்கள் வலுப்பெற்றன.

எண்ணெய் வளம் மிக்க அரபு நாடுகளில் மோதல்கள் உச்சகட்டத்தை அடைந்து பொதுமக்கள் பெரும் கையறு நிலையில் தவித்துக்கொண்டனர். அமெரிக்காவின் உலக மேலாதிக்கக் கனவுகள் நிறைவேறத் தேவையென்றால் எந்த நாட்டின் மேலும்

எப்போது வேண்டுமானாலும் தனது இராணுவத்தை பலத்தை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏவிவிடலாம் என்கிற ஒரு நிலையை ஈராக் யுத்தத்திற்குப் பின் அமெரிக்கா நிலைநாட்டியது.

இறையாண்மை, தேசம், தேச எல்லைகளின் புனிதம் என்றெல்லாம் பேசினாலும், அமெரிக்க ராணுவ பலமும் தொழில்நுட்ப வல்லமையால் தனது பொம்மை அரசை நிறுவி எண்ணெய் வளத்தை அரபுநாடுகளில் இருந்து தாராளமாக சுரண்டுகிறது.

### லிபியாவில் தொடரும் உள்நாட்டுப் போர்

லிபியாவில் ஏற்பட்ட நெருக்கடி 2011 ஆம் ஆண்டின் முற்பகுதியில் வன்முறை தொடங்கியதிலிருந்து பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புகளை ஏற்படுத்தியுள்ளது. உள்நாட்டுப் போர் நிகழும் லிபியாவில் 60 பில்லியன் பேரல் எண்ணை வளம் உள்ளது. உலகின் மொத்த எண்ணை மற்றும் எரிவாயு வளத்தில் 3.34% லிபியாவில் இருக்கிறது. இந்தப் போரின் பின்னால், லிபியாவின் எண்ணெயை எடுத்துவிற்பதற்கான முழு உரிமையை ஈட்டிக் கொடுப்பதுதான் அமெரிக்காவின் நோக்கமாக

இருந்தது ஆதாரங்களின் மூலம் அம்பலமானது. இதனையே 2011இல் அரபு வசந்த மாற்றமாக அமெரிக்க முன்னெடுத்த போர் லிபியாவில் நிகழ்ந்தது.

ஈராக்கில், சாதித்து விட்டோம் என்று ஜோர்ஜ் புஷ் அறிவித்தது போன்று லிபியாவில் கடாபி வீழ்ந்தவுடன், நாம் அனைவரும் சேர்ந்து வெற்றியை சாதித்திருக்கிறோம் என்று அறிவித்தார் அன்றைய நேட்டோ தலைவர். ஆயினும் மற்றொரு புறம் அமெரிக்கா உதவியுடன் விடுதலை பெற்றதாககூறப்படும் அரபு நாடுகளின் நிலை என்ன என்பதை லிபியாவின் நிலையிலிருந்தும் புரிந்து கொள்ளலாம்.

லிபியாவில் தொடரும் தற்போதைய நெருக்கடியானது, அந் நாட்டின் மனிதாபிமான பிரச்சினையையும், அரசியல் - இராணுவ உறுதியற்ற தன்மையையும் தோற்றுவித்துள்ளது. லிபியாவில் நிகழ்ந்த 2011 ஆம் ஆண்டின் அரபுவசந்த ஆர்ப்பாட்டங்களில் தொடங்கிய உள்நாட்டுப் போர், வெளிநாட்டு இராணுவத் தலையீடுகளை தொடர்ந்து கடாபியின் இறப்பிற்கும் வழிவகுத்தது.

அரபு நாடுகளில் செல்வந்த நாடாக ஓர் காலத்தில் திகழ்ந்த லிபியாவின் தலைநகர் திரிப்போலியில் உள்நாட்டுப் போரின் விளைவாக ஆயுதக்குழுக்களின் ஆதிக்கம் நாடு முழுவதும் வன்முறை மற்றும் உறுதியற்ற தன்மைக்கு வழி வகுத்துள்ளது.

### ஈராக்கில் சாதித்தது என்ன ?

ஈராக்கில் அமெரிக்கா கொண்டு வருவதாகச் சொன்ன ஜனநாயகமும் சுதந்திரமும் தனது பொருளாதார நலன்கள் நோக்கியதே.

(5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர்
Kalaikkathir

# அரபு வசந்தமாக தொடங்கி....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி....)

2003இல் அமெரிக்காவின் ஈராக் போர் என்பது நேரடி ஆக்கிரமிப்பு என்பதையும் கடந்த ஒன்றாகும்.

வட ஆப்ரிக்கா, மத்திய கிழக்காசிய மற்றும் மத்திய ஆசியப் பிரதேசங்களைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக, உலகின் 60% எண்ணெய் வளத்தை கட்டுப்படுத்தும் அமெரிக்காவின் விரிவான திட்டத்தின் ஒரு சிறிய அங்கம் தான் ஈராக் போர் என புலப்பட்டது.






**சிரிய போர் தொடர்கிறது**

சிரியாவின் உள்நாட்டுப் போரில் மார்ச் 2011 ஆம் ஆண்டு முதல் மார்ச் 2022 ஆம் ஆண்டு வரை 4.76,600 பேர் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஆனால், இது உண்மை யான எண்ணிக்கை இல்லை என்றும் இதனை விட அதிகமென மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இப்போரில் சிரிய அதிபர் பார் அல் ஆசாத்துக்கு ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் உதவின. அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளும் ஆரம்பக்கட்டத்தில் பாரிய அளவில் கிளர்ச்சியாளர்களுக்கு உதவின. பின்னர் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக துருக்கி மற்றும் சில அரபு நாடுகள் உதவி இருந்தன. தற்போது 12 ஆண்டுகளாக நடக்கும் சிரிய போர் எப்போது முடிவுக்கு வரும் என்று யாராலும் கணிக்க முடியவில்லை.




போர் நிறுத்தம் தொடர்பாக ஐ.நா மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தற்போது வரை தோல்வியே அடைந்துள்ளன. இந்த நிலையில் சிரிய அதிபர் பார் பதவி விலகல் ஒன்றையே கிளர்ச்சியா ளர்கள் சிரிய போரை முடிவுக்கு கோரிக்கையாக வைக்கின்றனர். கிளர்ச்சியாளர்களின் இந்தக் கோரிக்கையை பார் ஏற்கத் தயாராக இல்லை.


இந்த நிலையில்தான் சிரிய உள்நாட்டுப் போர் பன்னிரண்டாவது ஆண்டில் நுழைந்திருக்கிறது.

அதிகாரத்திற்காக தொடங்கப்பட்ட சிரிய போர் இன்னமும் தொடர்கிறது

**சிரிய போரின் தாக்கம்**

சிரியாவில் கிட்டத்தட்ட எழுபது வீத மக்கள் மிகவும் கொடுமையான வறுமையில் வாழ்ந்து வருகின்றனர். விலைவாசி மற்றும் உணவுத் தட்டுபாட்டால் ஆறு மில்லியன் மக்கள் உணவில்லாமல் இன்னமும் தவிக்கின்றனர். சில பகுதிகளில் உள்ள மக்கள் தங்களில் 15 முதல் 20 சதவிகித வருவாயை குடிநீரிற்காக செலவிடுகிறார்கள். மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் மக் களுக்கு உதவிகள் சென்று சேர முடியாத நிலையை போரில் ஈடுபட்டுள்ள குழுக்கள் உருவாக்கியுள்ளன. சுமார் 2.98 மில்லியன் மக்கள் உதவிகள் சென்றடைய முடியாத பகுதிகளில் உள்ளனர். அமெரிக்கா, சவூதி அரேபியா, ரஷ்யா மற்றும் ஈரான் போன்ற உலக சக்திகளின் தலையீடு இந்தப் போரில் முக்கிய பங்காளிகளாக அமைவதால் போரின் தீவிரம் தணிந்தாலும் , போர் இன்னமும் முடிவுறவில்லை.

உண்மையிலேயே அரபு வசந்தத்தை அமெரிக்கா உள்ளிட்ட மேற் குலக நாடுகள் தங்களது ஆதாயத்துக்காக பயன்படுத்திக் கொண்டன. தாம் விரும்பிய நாடுகளில் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்துவதற்கான கருவியாக இந்த அரபு வசந்தம் அமெரிக்காவுக்கு பேருதவியாக இருந்தது. ஆயினும் அரபு வசந்தமும், அதனுடைய விளைவுகளும் அந்த பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு பெரும் பொருளாதர நஷ்டத்தை விளைவித்திருக்கிறது. அத்துடன் அரபு வசந்தால் அரபு, ஆப்பிரிக்க நாடுகளில் பெரும் மனிதப் பேரழிவையும் ஏற்படுத்தியுள்ளமை கவலைக் குரியதே.




# போதை வர்த்தகர் கனேமுல்ல சஞ்சீவவை பொலிஸ் காவலில் விசாரிக்க அனுமதி

பிரபல போதைப்பொருள் வர்த்தகரும் ஒழுங்கமைக் கப்பட்ட குற்றசெயல்களுடன் தொடர்புடையவருமான கனேமுல்ல சஞ்சீவ என அழைக்கப்படும் சஞ்சீவ குமாரவை 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பிரபல போதைப்பொருள் வர்த்தகரும் ஒழுங்கமைக் கப்பட்ட குற்ற செயல்களுடன் தொடர்புடையவருமான கனே முல்ல சஞ்சீவ நேபாளம், காத்மாண்டு விமான நிலையத்திலிருந்து ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு சொந்த மானவிமானத்தின் மூலம் கடந்த வியாழக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு போலி கடவுச் சீட்டை பயன்படுத்தி வருகை தந்த போது கைது செய்யப்பட்டிருந்தார்.

எவ்வாறாயினும் சந்தேக நபர் வழங்கிய ஆவணங்கள் தொடர்பில் சந்தேகம் கொண்ட குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் அவர் போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி நாட்டுக்கு வருகை தந்துள்ளமையை கண்டறிந்துள்ளனர். அந்த கடவுச்சீட்டில் சேனாதிரகே கருணாரத்ன என்ற பெயர் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான விசாரணைகளுக்கு அமைய அவர் கனேமுல்ல சஞ்சீவ எனத் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 45 வயதுடைய கனே முல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் அவர் கடந்த 2021 ஆம் ஆண்டு சட்டவிரோதமான முறையில் படகு மூலம் கடல் மார்க்கமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கனேமுல்ல சஞ்சீவ இந்தியாவுக்கு சென்று அங்கிருந்து நேபாளத்துக்கு குடியேறியுள்ளார் எனவும் இதன்போதே போலி கடவுச்சீட்டை பெற்றிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சந்தேகநபர் பல்வேறு துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் ,கொலை, கொள்ளை, தாக்குதல் சம்பவங்கள், போதைப்பொருள் வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டு தேடப்பட்டு வந்த குற்றவாளி என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபருக்கு எதிராக நாடளாவிய ரீதியில் பல நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் நிலுவைகளில் காணப்படுகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் சந்தேகநபரான சஞ்சீவ குமாரவை 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவர் கொழும்பு வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (05)

# பரிசளிப்பு விழா!

ஐக்கிய தமிழ் மன்றம் நடத்திய சுதந்திர தின கட்டுரை போட்டியின் முடிவறிவிப்பு மற்றும் பரிசளிப்பு விழா தலைவர் தஸ்தகீர் சுலைமான் தலைமையில் ஒண்டர் பிளஸ் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

ஒருங்கிணைப்பாளர் முஹம்மது உசைன் நிகழ்ச்சியை தொகுத்து, துணைப் பொதுச்செயலாளர் முஹம்மது உவைஸ் வரவேற்புரை யாற்றி, ஊடகப் பிரிவு செயலாளர் ஹாஜா செயல்பாடு அறிக்கை வாசிக்க, பொதுச்செயலாளர் ஹுஸ்ஹமீது, துணைத் தலைவர் சித்திக் மைதீன், துணைச் செயலாளர் தாஹிர், உறுப்பினர்கள் பஷீர், கமருதீன், அப்துர் ரஹ்மான், முஹம்மது பாரூக், தன்னர்வலர் பாபு ஆகியோர் கலந்து கொள்ள, கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களுடன் அறிவித்த பரிசுத் தொகையும் வழங்கி பாராட்டப்பட்டனர். இதில் கட்டுரைப் போட்டியின் மேற்பார்வையாளராக செயற்பட்ட முனைவர் வாசுகி சத்திய பாபு, ஐ.சி.பி.எப். தலைவர் ஈநவாஸ் பாவா, பொதுச் செயலாளர் வர்கீஸ் போபன், இளைஞர் நல நிர்வாகி மீர் அஹ்மத், ஆலோசனைக்குழு உறுப்பினர் இரா செல்வம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். மேலும் கத்தாரில் உள்ள பேரவைகள், ஜமாத்துகள் மற் றும் சமூக நல அமைப்புகளின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டு மாணவர்களை வாழ்த்தினர். (05)

# ஜோர்தானில் வீட்டுபணிக்குச் செல்லும் பெண்களுக்கு புதிய காப்பீட்டுத் திட்டம்

ஜோர்தானுக்கு வீட்டு தொழிலுக்காக செல்லும் பெண்களின் பாதுகாப்புக்காக புதிய காப்பீடொன்றை அறிமுகப்படுத்த இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன் பிரகாரம் குறித்த தொழிலுக்காக பெண் தொழிலாளியை இணைத்துக்கொள்ளும் சேவை வழங்குநரால் இந்த காப்பீடு கட்டாயமாக பெற்றுக்கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் வெளிநாட்டு தொழிலுக்காக குறித்த பெண் பணியகத்தில் பதிவை பெற்றுக்கொள்வதற்காக குறித்த காப்பீட்டு சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

அத்துடன் ஜோர்தான் நாட்டுக்கு வீட்டு வேலைகளுக்காக செல்லும் பெண்கள் இந்த காப்பீட்டைப் பெற்றுக்கொள்வது கட்டாயம் என்பதுடன் அதற்காக ஜோர்தான் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் மூன்று காப்பீட்டு திட்டங்களில், அவர்களுக்கு பொருத்தமான காப்பீடொன்றைத் தெரிவு செய்து கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கிறது.

தொழில் ஒப்பந்த காலத்துக்குள் குறித்த தொழிலாளி மரணித்தால் அல்லது திடீர் விபத்து காரணமாக நிரந்தர பூரண ஊனமுற்ற நிலைமைக்கு ஆளானால் இதன் ஊடாக காப்பீட்டு நட்ட ஈடாக வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக வைத்தியசிகிச்சை பெற்றுக்கொள்ளல், சத்திரசிகிச்சை, கொவிட் போன்ற தொற்று நோய்களுக்காகவும் காப்பீட்டு நட்ட ஈடு உரித்தாகும்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஹரக்கட்டா தப்பிக்க முயன்றபோது உதவி புரிந்த பொலிஸ் கான்ஸ்டபிள் இந்தியா போயிருக்கலாம்?

## பொலிஸார் சந்தேகம்

திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஹரக்கட்டாவை நீதிமன்றத்துக்கு அறிவிக்காமல் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தில் இருந்து அழைத்துச் செல்லவோ அல்லது இடம் மாற்றவோ வேண்டாம் என மேன்முறையீட்டு நீதிமன்றம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.

மேலும் சந்தேக நபர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் இருந்து தப்பிச் செல்வதற்கு முயன்றபோது உதவிய பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் எனவும் அவர் இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஹரக்கட்டா எனப்படும் திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நதுன் சிந்தக கடந்த ஞாயிற்றுக்கிழமை (10) குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் இருந்து பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் உதவியுடன் தப்பிச் செல்ல முயற்சித்துள்ளார். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து ஹரக்கட்டா தப்பிச் செல்லும் திட்டம் இந்தியாவில் உள்ள அவரது நெருங்கிய சகாக்களில் ஒருவரான மிதிகம சூட்டி என்ற பிரபாத் மதுசங்க என்பவரால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இந்தச் சம்பவத்தின் பின்னர் கான்ஸ்டபிள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து தப்பிச் சென்றதுடன் அவரைக் கைது செய்ய கொழும்பு குற்றப் பிரிவு உட்பட பல குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்தன. பொலிஸ் கான்ஸ்டபிள் திருகோணமலை, சேருவில பிரதேசத்தில் வசிக்கும் தனது பெற்றோருடன் தொடர்பு கொண்டு அந்த பகுதியில் 50 லட்சம் ரூபா பெறுமதியான நெற்காணியை கொள்வனவு செய்யுமாறு கூறினார் எனத் தெரியவந்துள்ளது.

நிலத்தை வாங்கிய பின் டுபாயில் பெற்றுக்கொள்ளப்பட்ட மடிக்கணினி மற்றும் வெவ்வேறு வகையான கையடக்கத் தொலைபேசிகளை உறவினர்களுக்கு பெற்றுக் கொடுத்துள்ளார். பொலிஸ் கான்ஸ்டபிள், ஹரக்கட்டா மற்றும் மிதிகம சூட்டி ஆகியோருடன் பல தடவைகள் தொலைபேசியில் தொடர்புகொண்டுள்ளமை தொடர்பில் சந்தேகம் நிலவுவதாகப் பொலிஸார் குறிப் ணபிடுகின்றனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளின் அனைத்து கையடக்கத் தொலைபேசிகளும் அதன் பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவேண்டிய நிலையில் குறித்த கான்ஸ்டபிள் தனது இரண்டு கையடக்கத் தொலைபேசிகளையும் ஒப்படைத்துள்ள போதிலும் இரகசியமாக வேறொரு கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்தியமை தற்போது தெரியவந்துள்ளது.

மேலும் சந்தேக நபர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் இருந்து தப்பிச் செல்ல உதவிய பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் எனவும் அவர் இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை ஹரக்கட்டாவை நீதிமன்றத்துக்கு அறிவிக்காமல் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தில் இருந்து அழைத்துச் செல்லவோ அல்லது இடம் மாற்றவோ வேண்டாம் என மேன்முறையீட்டு நீதிமன்றம் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளான நிங்க பந்துல கருணாரத்ன மற்றும் சமத் மொராயஸ் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் நந்துன் சிந்தக விக்ரமரத்ன என்ற 'ஹரக்கட்டா' தாக்கல் செய்த மனு விசாரணை தொடர்பிலேயே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணை முடியும் வரை குறித்த உத்தரவு அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 25 ஆம் திகதி இடம்பெறும். தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவை மேலும் நீடிப்பதை தடுக்க உத்தரவிடுமாறு கோரி 'ஹரக்கட்டா' தனது சட்டத்தரணிகள் ஊடாக இந்த மனுவை சமர்ப்பித்துள்ளார். (05)

# அஸ்ரப் நினைவுதின துஆப் பிரார்த்தனை





ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகரும், முஸ்லிம் சமூகத்தின் மாபெரும் தலைவருமான மர்ஹூம் எம்.எச்.எம். அஸ்ரபின் 23 ஆவது நினைவுதினம் சனிக்கிழமை அனுஸ்டிக்கப்பட்டது.

அந்த வகையில் அம்பாறை மாவட்ட கல்முனை அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத் உலமா சபையினரின் ஏற்பாட்டில் கல்முனை முஹையத்தீன் ஜும்மா பெரிய பள்ளிவாசலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகரும், முஸ்லிம் சமூகத்தின் மாபெரும் தலைவருமான, முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம். அஸ்ரபின் 23 ஆவது நினைவு தினம்

அம்பாறை மாவட்ட கல்முனை அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத் உலமா சபைத்தலைவர் மௌலவி பி.எம்.ஏ ஜலீல் (பாகவி) தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டமாணி ரவூப் ஹக்கீம், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரிஸ் ஆகியோர் தலைவர் அஸ்ரப் நினைவுரையை நிகழ்த்தினர்.

அம்பாறை மாவட்ட கல்முனை அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத் உலமா சபையினர் குர்ஆன் ஓதி தமாம் செய்ததுடன், துஆ பிராத்தனை செய்தனர்.

முஹையத்தீன் ஜும்மா பெரிய பள்ளிவாசல் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ. அசீஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சிப்பிரமுகர்கள் என்று பலரும் கலந்து கொண்டனர். (05)








# 97 ஆவது வயதில் பட்டம்பெற்று அசத்தினார் மூதாட்டி மாணவி!



97 வயதான மூதாட்டி ஒருவர் தனது முதுகலைப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

களனிப் பல்கலைக் கழகத்தின் பாலி மற்றும் பௌத்த கற்கைகள் நிலையத்தில் கல்விகற்ற மூதாட்டியே இவ்வாறு முதுகலைப் பட்டத்தை பெற்றுள்ளார்.

களனிப் பல்கலைக் கழகத்தில் இதுவரை பதிவுசெய்யப்பட்ட மிக வயதான மாணவர் என்ற பெருமையை 97 வயதான விதானகே அசிலின் தர்மரத்ன பெற்றுள்ளார்.

இவரது பட்டப்படிப்பிற்கான பாடங்கள் 7 பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. பாலி, நியதியில், பௌத்த தத்துவம், இலங்கையில் பௌத்த கலைகள் மற்றும் கட்டடக்கலை, பௌத்த உளவியல், பௌத்த தத்துவத்தில் பொருளாதாரம், தேரவாத பாரம்பரிய வரலாறு மற்றும் தர்மம் போன்ற பிரிவுகளை உள்ளடக்கியதுடன் பௌத்த நெறிமுறைகளது கருத்துக்கள், தத்துவ விளக்கங்கள் மற்றும் ஆராய்ச்சி முறைகளைக் கொண்டது.

அவரது ஆய்வறிக்கை எம்பெக்கே தேவாலயத்தின் மர வேலைப்பாடுகளில் கடந்தகால வாழ்க்கை முறைகளை உள்ளடக்கியுள்ளது.

இளம் வயதில் அசிலின் தர்மரத்ன ஒரு நொத்தாரிசாக தனது வாழ்க்கையை ஆரம்பித்து பின்னர் இலக்கிய பாதையில் கவனத்தை திசைதிருப்பினார். இவருக்கு 6 பெண் பிள்ளைகள் உள்ளனர். இந்நிலையில், தனது 94 ஆவது வயதில் வித்யோதயா பல்கலைக்கழகத்தில் திரிபிடகம் மற்றும் பாலி மொழி தேர்வில் வெற்றிகரமாக தேர்ச்சி பெற்றார். (05)



# கிழக்கின் கேடயம் எஸ்.எம். சபீஸ் தலைமையில் அக்கறைப்பற்றில் அஸ்ரப் நினைவு தின நிகழ்வு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் 23 ஆவது வருட நினைவு தின நினைவேந்தல் நிகழ்வு சனிக்கிழமை அக்கறைப்பற்று எம்.எஸ்.மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கின் கேடயம் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாசில், கிழக்கிலங்கை அனைத்துப் பள்ளிவாசல்கள் நிறுவனத்தின் தலைவர் ஏ.சீ.எம்.புஹாரி ஆகியோர் விசேட அதிதியாக கலந்து கொண்டு தலைவர் அஷ்ரபின் அரசியல் முன்னெடுப்புகள், இலங்கை அரசியலில் அஸ்ரபின் வகிபாகம், தேசிய அரசியலில் அஷ்ரபின் சாதனைகள், முஸ்லிம் அரசியலில் அஷ்ரப் சாதித்தவை தொடர்பில் சிறப்புரை நிகழ்த்தினர்.

கிழக்கின் கேடயம் அமைப்பின் தலைவர் எஸ்.எம்.சபீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் ஆத்ம ஈடேற்றத்திற்காக விசேட கத்தமுல் குர்ஆன், மற்றும் விசேட துஆ பிரார்த்தனை இடம்பெற்றது.

விசேட துஆ பிரார்த்தனை தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எம். அப்துல் றாஸிக் நிகழ்த்தினார். அத்தோடு கிழக்கின் கேடயம் கடந்த காலங்களில் சாதித்த விடயங்களை கிழக்கின் கேடயம் பொதுச்செயலாளரும், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினருமான யூ.எல்.என். ஹூதா விளக்கினார்.

இந்நிகழ்வில் உலமாக்கள், சுற்றாடல் திணைக்கள அம்பாறை மாவட்ட சிரேஸ்ட அதிகாரி எம்.ஐ.எம்.இசாக், வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஓய்வுபெற்ற பொறியியலாளர் என்.ரி. சிராஜூதீன், அக்கறைப்பற்று உலமா சபையின் செயலாளர் மௌலவி எம்.ஐ.எம். ஹபீப், கிழக்கின் கேடயம் அமைப்பின் கள செயற்பாட்டாளர் சபூர் ஆதம், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (05)

# இரு பஸ்கள் ஒன்றுடனொன்று மோதி விபத்து: ஆசிரியர் ஒருவர், 21 மாணவர்கள் படு காயம்

பாதுக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரு பஸ்கள் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஆசிரியர் ஒருவர் உட்பட மாணவர்கள் 21 பேர் காயமடைந்துள்ளனர்.

பாதுக்க, துன்னான பிரதேசத்தில் நாரம்மலவிலிருந்து ஹோமாகம நோக்கி பாடசாலை மாணவர்களை ஏற்றிக்கொண்டு பயணித்துக் கொண்டிருந்த பஸ் ஒன்றுடன் பின்னால் வந்த மற்றுமொரு பஸ் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பாதுக்க பொலிஸார் தெரிவித்தனர்.

நாரம்மல, மயூரபாத மகா வித்தியாலய மாணவர்கள் குழுவொன்று ஹோமாகம, பிடிபன நனோ தொழில்நுட்ப நிறுவனத்தில் இடம்பெற்று வரும் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக 6 பஸ்களில் சென்றுக் கொண்டிருந்த போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஆசிரியர் ஒருவர் உட்பட 21 மாணவர்கள் காயமடைந்த நிலையில் பாதுக்க பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் 18 மாணவர்கள் சிறுகாயங்களுக்குஉள்ளாகிய நிலையில் அவர்கள் சிகிச்சை பெற்று கல்விச் சுற்றுலாவுக்கு திரும்பியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை அவர்களில் மேலும் மூவர் மேலதிக சிகிச்சைக்காக ஹோமாகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சைபெற்றுவருகின்றனர் எனவும் பாதுக்க பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். பாதுக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# புதிய ஹவானா பிரகடனத்தை ஆதரிப்பதற்கு இலங்கை தயார்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

புதிய ஹவானா பிரகடனத்தை ஆதரிப்பதற்காக இலங்கை அர்ப்பணிப்புடன்இருப்பதாகஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவலியுறுத்தினார்.

கியூபாவின் ஹவானா நகரில் நேற்று ஆரம்பமான "ஜி77 – சீனா" அரச தலைவர் உச்சி மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தொற்றுநோய்கள், காலநிலை மாற்றங்கள், உணவு, உரம் மற்றும் வலுசக்தி நெருக்கடிகள் போன்றவை, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு தடைகளை ஏற்படுத்துகின்றன. அதேபோன்று, அந்த நிலைமையை, உலகளாவிய கடன் நெருக்கடி மேலும், அதிகரிக்கச்செய்வதுடன், அதன் காரணமாக முன்னெப்போதும் இல்லாத சவால்களை எதிர்கொள்ளும் நிலை, தெற்காசிய நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

15 ஆம் நூற்றாண்டில் துப்பாக்கி குண்டுகள், பீரங்கிகள் மற்றும் கடல் பயணக் கப்பல்கள் போன்ற துறைகள் மூலம் ஐரோப்பா அடைந்த முன்னேற்றங்கள் காரணமாக, அவற்றுக்கு உலகின் பிற நாடுகளைக் கைப்பற்றமுடிந்தது. அதன்விளைவாக, உலகில் இன்று தொழில்நுட்ப ரீதியிலான பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் தோன்றியுள்ளன.

அதிக செலவு காரணமாக, சில தொழில்நுட்ப முறைகளுக்கு பிரவேசிப்பதற்குள்ள வரையறைகள், போதுமான டிஜிட்டல் திறன்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை, கலாசார மற்றும் நிறுவன ரீதியில் நிலவும் தடைகள் மற்றும் நிதி தொடர்பான தடைகள் போன்ற சவாலான சூழ்நிலைகள் இத்தகைய ஏற்றத்தாழ்வுகளுக்கு வழிவகுத்தது என்பதே எமது நம்பிக்கையாகும்.

21ஆம் நூற்றாண்டில் இந்தப் புதிய தொழில்நுட்ப ஏற்றத்தாழ்வு மிகவும் அதிகரித்துள்ளது. அந்த இடைவெளியைக் நிரப்புவதற்காக, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் பிக் டேட்டா(யஷ்ஆம்ழிமிழி), இண்டர்நெற் ஒவ்திங்ஸ்(ஞூஜமிளஷஜளமிலிக்ஷூ வீஜுஷ்ஜஆவி (ஞூலிவீ), செயற்கை நுண்ணறிவு , டீடழுஉடமஉ ஜுயஷ்ஜ, உயிரியல்தொழில்நுட்பவியல்மற்றும் மரபணு வரிசைமுறை போன்ற புதிய தொழில்நுட்பங்களை நோக்கி நாம் விரைவாக செல்ல வேண்டியது அவசியமாகும்.

அபிவிருத்திப்பொறிமுறைகளைப் பின்பற்றுவதற்கானசெயல்முறையை இலகுபடுத்துவதற்குத் தேவையான மாற்றங்களைச்செய்வதற்கும், அந்தச் செயல்முறைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு, அதற்குத் தேவையான அறிவு மற்றும் முழுமையான தொழில்நுட்பத்துடன், கற்ற தொழிற்படையும் இருக்க வேண்டும்.

தற்போது குறைந்த செயற்திறனுள்ள விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் குறித்து மதிப்பீடுகளைச்செய்வதற்கும், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க சபையொன்றையும், டிஜிட்டல் மாற்ற முகவர் நிறுவனமொன்றையும் நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை இலங்கை எடுத்துள்ளது.

மேலும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொழில்நுட்ப ஒத்துழைப்பின் பிரதிபலனாக, புதிய தொழில்நுட்பவியலுக்காகவே விசேடமான நான்கு புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கும் இலங்கை திட்டமிட்டுள்ளது. மேலும், காலநிலை மாற்றம் குறித்த உத்தேச சர்வதேச பல்கலைக்கழகத்தை அதில் ஐந்தாவதாக ஸ்தாபிப்பதற்கும் நாம் எதிர்பார்த்துள்ளோம்.

"ஜி77-சீனா" குழுவில்செயற்திறன் மிக்கஒத்துழைப்புபொறிமுறைஒன்றும் தேவை. உலகளாவிய தெற்கிற்கான விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களுக்கான ஒன்றிணைவு புத்துயிர் பெறச்செய்வதற்கு அதன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக ஒரு தசாப்தமாக அவர்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒருசதவீதத்தை ஒதுக்குவதன் மூலம், உறுப்பு நாடுகள் சில அர்ப்பணிப்புகளைச்செய்யவேண்டும் என்றும் நான் பரிந்துரைக்க விரும்புகின்றேன்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத் துறையைப் பின்பற்றி, டிஜிட்டல் மயமாக்கல், சுகாதாரம், மருத்துவம், செயற்கைநுண்ணறிவுமற்றும்பசுமை ஹைட்ரஜன் போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறைகளில், தொழில்நுட்பத் தளங்களை உருவாக்குவதற்கு அரச துறை மற்றும் தனியார் துறை ஆகிய இரண்டும் ஒத்துழைப்புடன் செயற்படுவது மிகவும் முக்கியமாகும்.

உலகளாவியரீதியில்தெற்கிலிருந்து வடக்கிற்கு இடம்பெறும் நுண்ணறிவு ஓட்டத்தின் பிரதிபலனாக கல்வி கற்ற தொழிற்படை இழப்பு, தெற்கின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத் துறைகளின் வளர்ச்சிக்கு மற்றொரு அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகள் அவர்களின் தொழிற்படைப் பலத்தை மேம்படுத்தி, அதன் மூலம் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தில் முன்னேற்றியுள்ளது. அதன் காரணமாக உலகில் தெற்கு என்ற ரீதியில் நமது கற்ற தொழிற்படை இழப்புக்காக, உலகின் வடக்கில் இருந்த இழப்பீடு கோரப்படவேண்டும்.

உலகளாவிய ரீதியில், தெற்கு நாடுகளுக்கு இடையில் அதிக ஒத்துழைப்பை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். ஒத்துழைப்பை மேம்படுத்தல், சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக் கொள்ளுதல், மற்றும் விஞ்ஞானம், தொழிநுட்பம், புத்தாக்கம் ஆகியவற்றின் ஆற்றல்களைப் பயன்படுத்தக் கூடிய கொள்கைகளை மேம்படுத்துவதற்கு கொழும்புத் திட்டத்தைப் போன்ற ஒரு திட்டத்தை உருவாக்குவது குறித்தும் நான் இங்கு பரிந்துரைக்கின்றேன்.

புதிய ஹவானா பிரகடனத்தை ஆதரிப்பதற்காக இலங்கை அர்ப்பணிப்புடன்இருப்பதாகவும்வலியுறுத்த வேண்டும். "ஜி77-சீனா" அரச தலைவர் களின் உச்சிமாநாட்டின் கூட்டுக் குரல், சர்வதேச ரீதியில் ஒலிக்கச் செய்ய ஒன்றிணையுமாறும் நான் அனைத்து உறுப்பு நாடுகளிடமும் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

### ஜே.ஆரின்....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

புரட்சியாளர். அவர் 1977 ஆம்ஆண்டுதொடக்கியசமூக பொருளாதாரகொள்கைகளை அவ்வண்ணமேமுன்னோக்கிக் கொண்டுசென்றிருந்தால் இலங்கைஇன்றுஅபிவிருத்தி அடைந்த நாடாகியிருக்கும்.

நாட்டில், ஏற்பட்ட கலவரங்கள், போர் மற்றும் அவரது கொள்கை பற்றிய புரிதல் இன்மை காரணமாக, அவரது சமூக பொருளாதார கொள்கைகளின் பயன்களை முழுமையாக அடைய முடியாமல் போனது.

எமது வலயத்தில் இந்தியா , சீனா, வியட்நாம், உள்ளிட்ட நாடுகள் ஜே. ஆர்.ஜெயவர்தனவின் கொள்கைகளையே பின்பற்றின. அந்த நாடுகள் காலத்திற்கு ஏற்றவாறு தமது கொள்கைகளை மாற்றிக் கொண்டு முன்னோக்கிச் சென்றன.

1938களில்காங்கிரஸ்கட்சி உறுப்பினராக அரசியலுக்கு பிரவேசித்த அவர், 1946களில் ஐக்கிய தேசிய கட்சியைத் தொடங்கினார். இலங்கையின் முதலாவது அமைச்சரவை அமைச்சராகதெரிவானதோடு, டட்லி சேனநாயக்கவுக்கு பின்னர் 1973 களில் ஐக்கிய தேசியகட்சியின்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1977 தேர்தலில் இலங்கையின்பிரதமரானஜே. ஆர். அரசமைப்பு மாற்றத்தின் ஊடாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை உருவாக்கினார்.

அணிசேரா அமைப்பின் ஆறாவது பொதுச் செயலாளராக அவர்தனதுநாட்டுக்காக ஆற்றிய சேவைகள் மகத்தானவை. அதனை நினைவுகூருவது பாராட்டப்பட வேண்டியது – என்றார்.

### கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைக்குஇன்றையஆட்சியே பொறுப்புக்கூறுவதோடுஇந்தத் திட்ட தாக்குதலைச் செய்யத் தூண்டியவர்களுக்கும் தாக்குதலை நடாத்திய காடையர்களுக்குஉரியதண்டனை வழங்கபடவேண்டும்" என்று ஒன்றியம்தனதுஅறிக்கையில் தெரிவித்துள்ளது.

### யாழ். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறியீடாகும்.

ஊர்தியானது தமிழர் தலைநகரிலேயேதாக்கப்பட்ட சம்பவமானதுவடக்கு,கிழக்கு மாகாணங்களில்இன்னமும் தமிழ் மக்களுக்கு குறைந்தபட்ச நினைவு கூரும் உரிமையும் அதற்கான ஜனநாயக வெளியும் மறுக்கப்பட்டு வருகிறது என்பதற்கு நேரடி நிகழ்கால எடுத்துக்காட்டாகும்.

அகிம்சையைப் பற்றிப் போதித்து அகிம்சாவாதிகளுக்கும் ஜனநாயகவாதிகளுக்கும் முன்னுதாரணமாகவிளங்கும்தியாக தீபம்திலீபன்அண்ணாவின் இந்த நினைவேந்தல் ஊர்தியை தாக்கும் சிங்கள அடிப்படைவாத கும்பல்களைப் பார்த்தாவது நம் வளரிளம் தலைமுறையும் உலகச் சமூகமும் தமிழ் மக்களின் இந்த இழிநிலையைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் – என்றுள்ளது.




காலைக்கதிர் Kalaikkathir

# குருநாகலில் மாணவ குழுக்களுக்குள் மோதல்; 4 மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்ப்பு!

குருநாகலில் உள்ள பாடசாலையொன்றின் இரண்டு மணவகுழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் 4 மாணவர்கள் காயமடைந்து குருநாகல் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனக் குருநாகல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநாகல் பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றின் 11 ஆம் மற்றும் 12 ஆம் தர மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம், பின்னர் மோதலாக மாறியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இம்மோதலானது பாடசாலை நேரத்தில் இடம்பெற்றுள்ளது. இதன்போதே 4 மாணவர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸ் பிரிவின் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் அதிகாரிகள் குழு மேற்கொண்டு வருகிறது. (05)

# கிழக்கு தனியார் வைத்தியசாலை பிரதிநிதிகளுடன் ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடல்





கிழக்கு மாகாண தனியார் வைத்தியசாலைகளின் பிரதிநிதிகளுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தனியார் வைத்தியசாலை அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஊடாக தனியார் வைத்தியசாலைபிரதிநிதிகளுக்குமேலதிக உதவிகள் வழங்குவதற்கும் நடவடிக்கைளெடுக்கப்பட்டுள்ளது. (05)





# உலக நோயாளர் பாதுகாப்புத் தினம் கிளிநொச்சியில் நேற்று அனுஷ்டிப்பு

உலக நோயாளர் பாதுகாப்பு தினம் நேற்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் சுகந்தனும் சட்ட வைத்திய அதிகாரி தனுசனும் மற்றும் வைத்தியர்கள், தாதியர்களும் வைத்தியசாலை நலம்புரிச் சங்கத்தினரும் கலந்து கொண்டனர்.

நோயாளர்களை எப்படி பாதுகாக்கவேண்டும் எனும் தொனிப்பொருளில் நிகழ்வில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. கிளிநொச்சி வைத்தியசாலையில் அண்மையில் பெண் ஒருவரின் கருப்பை அகற்றப்பட்டமைக்கான காரணம், அப்பெண்ணின் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் தடுப்பதுதான். கருப்பை அகற்றப்படாவிட்டால் அப்பெண் உயிரிழந்துவிடுவார் என்கிற நிலையிலேயே அத அகற்றப்பட்டது என்று அங்கு உரையாற்றிய வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார். அத்துடன் வைத்தியசாலை வலாகத்தில் நோயாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சசினைகள் தொடர்பாகவும் ஆரா யப்பட்டது. அதற்காக குறைநிவர்த்தி செய்யும் பிரிவும் தொடங்கப்பட்டது. இந்தப் பிரிவு ஊடாகப் பொது மக்கள் தம்க்கு வைத்தியசேவையில் ஏற்றபடும் பிரச்சினைகள் தொடர்பாக முறையிட்டு அதற்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் 1907 என்ற என்னுக்கு தொடர்புகொண்டு சேவையினையும் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (113)

# தற்கொலை தடுப்பு தினத்தையொட்டி கல்முனையில் ஒரு வார நிகழ்வுகள்

(வி.ரி.சகாதேவராஜா)

உலக தற்கொலை தடுப்பு தினத்தினை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் ஒருவார கால சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

செப்டெம்பர் 11 உலக தற்கொலைகள் தடுப்பு தினமாகும். அதனையொட்டி கல்முனை ஆதார வைத்தியசாலையில் பணிப்பாளர் மருத்துவர் இரா முரளீஸ்வரன் தலைமையில் சிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன.

இந்நிகழ்வில் உளவியலாளர் திருமதி சம்ருத்ரிப்டின் (ஷீவ), வைத்தியசாலையின் மனநல வைத்திய நிபுணர் மருத்துவர் ஏஜிஎம்.ஜூராச், வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஜே.மதன் மற்றும் வைத்தியசாலையின் மூத்த வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

தாதிய பொறுப்பு உத்தியோகத்தர் க. அழகரெட்னத்தின் வரவேற்புரையை தொடர்ந்து வைத்தியசாலையின் பணிப்பாளர் தலைமை உரை நிகழ்த்தினார். அதனை தொடர்ந்து உளவியலாளரின் தற்கொலை தடுப்பு தொடர்பான விரிவுரை, வைத்தியசாலையின் மனநல வைத்திய நிபுணரின் தற்கொலை தடுப்பு தொடர்பான விளக்கக் காட்சிப்படுத்தல், மனநல பிரிவின் சிரேஷ்ட மருத்துவர் யூ.எல்.சராப்டீனின் தற்கொலை தடுப்பு தொடர்பான விரிவுரைகள் என்பன இடம் பெற்றன.





# இயற்கை நேயமிக்க சூழலே மாணவர்களை வலுவூட்டும்

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

இயற்கைநேயமிக்க பாடசாலைச் சூழலே மாணவர்களுக்கு உளவியல் ரீதியாக புத்தெழுச்சியூட்டி, அவர்களிடையே கல்வி மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளில் உள்ளார்ந்த விருப்போடு ஈடுபடுவதற்கான தூண்டலை ஏற்படுத்தும். பிள்ளைகளின் அடிப்படை எதிர்பார்ப்புகளுக்கேற்பவே பாட சாலைகளின் அகப்புறச் சூழல் கட்டமைக்கப்பட வேண்டும். அதுவே மகிழ்வான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்குக் களம்அமைத்துக்கொடுக்கும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பேராலை சி.சி.த.க. பாடசாலையின் சிறுவர் விளையாட்டு முற்றத் திறப்புவிழா நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் பச்சிலைப்பள்ளிக் கோட்டத்தில் வெறுமனே முப்பத்தியிரண்டு (32) மாணவர்களோடு இயங்கும் இந்தப் பாடசாலை, தனது கட்டமைப்பு ரீதியாகக் கொண்டிருக்கின்ற கம்பீரத் தோற்றம், வனப்புமிகு பௌதீகச் சூழல் அதன் கவின் நிலை, கல்வித் தரம் என்பவை மாணவர்களுக்கு மகிழ்வளிக்கக்கூடிய கற்றல் சூழலை ஏற்படுத்தியுள்ளதை என்னால் அவதானிக்க முடிகிறது. ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு மாணவர் எண்ணிக்கையோ, அதன் அமைவிடப்பிரதேசமோ தடையாகாது என்பதற்கு இப்பாடசாலையை நான் முன்னுதாரணமாகக் கருதுகிறேன்.

பாடசாலைகளின் பௌதீகச் சூழல் கட்டமைப்பு, கல்வி அடைவுமட்டம் என்பவற்றின் விளிம்பு நிலைக்கு மாணவர்களது எண்ணிக்கைக் குறைவைக் காரணம் காட்டும் பல பாடசாலைகளின் நிர்வாகங்களும், திணைக்கள மட்டங்களும் இந்தப் பாடசாலையைத் தமக்கான வழிகாட்டியாகக் கொள்ளவேண்டும் - என்று தெரிவித்தார்.

பாடசாலையின் அதிபர் நடராசா இராமதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பச்சிலைப்பள்ளி கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.திலீபன், பழைய மாணவர்களும் பாடசாலை நலன்விரும்பிகளுமான செல்லையா கனகரத்தினம், சிவகுரு செல்வராசா மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் மேனாள் உறுப்பினர் அருள்செல்வி கனகராசா, பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (113)

# இந்த ஆண்டு 27 கோடி கிலோ தேயிலை விளைச்சலை நாம் எதிர்பார்க்கின்றோம்

## பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண நம்பிக்கை

தேயிலை உற்பத்தியை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு சிறந்த மட்டத்திலேயே காணப்படுகிறது. அதற்கமைய இவ்வாண்டில் சுமார் 27 கோடி கிலோ தேயிலை விளைச்சலை எதிர்பார்ப்பதாக பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

இலங்கை தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களின் வருடாந்த மாநாடு சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்-

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டு தேயிலை உற்பத்தி உயர் மட்டத்திலேயே காணப்படுகிறது. கடந்த ஆண்டு இரசாயன உரத்துக்கு விதிக்கப்பட்ட தடை காரணமாக விளைச்சல் பாரியளவில் வீழ்ச்சியடைந்தது. ஆனால், இவ்வாண்டு விளைச்சல் அதிகரித்துள்ளது. தேயிலை தோட்ட மற்றும் சிறு தோட்ட உரிமையாளர்களுக்கு கிடைக்கும் இலாபம் தொடர்பில் நாம் கலந்துரையாடியுள்ளோம்.

அதற்கமைய, தேயிலை உற்பத்திக்காக வழங்கப்படும் அனைத்து வசதிகளையும் தொடர்ந்தும் வழங்குவதற்கு அரசாங்கம் என்ற ரீதியில் நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு தேயிலை சபையால் வழங்கப்படும் நிதியின் ஊடாக தேயிலை தொழிற்துறையை மேலும் மேம்படுத்துவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நீரிழிவு உள்ளிட்ட நோய்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்திலேயே இரசாயன உரப் பாவனைக்குத் தடை விதித்தார்.

எவ்வாறிருப்பினும், இது தொடர்பில் எம்மால் ஆலோசனைகள் வழங்கப்பட்ட போதிலும், தீர்மானத்தை செயற்படுத்தும்போது ஏற்பட்ட சிக்கல்கலால் இறுதியில் முழு நாடும் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ள நேர்ந்தது.

இலங்கையில் கடந்த 2013 ஆம் ஆண்டு அதிகளவான தேயிலைவிளைச்சல் பெறப்பட்டது. அவ்வாண்டில் 34 கோடி கிலோ விளைச்சல் பெறப்பட்டது.

2015 இல் இந்த நிலைமையை மீண்டும் அடைய முடிந்தது. அதன் பின்னர் படிப்படியாகக் குறைவடைந்து கடந்த இரண்டு ஆண்டுகளில் 25 - 27 கோடி



கிலோ விளைச்சலைப் பெற முடிந்துள்ளது. இவ்வாண்டிலும் 27 கோடி கிலோ விளைச்சலை எதிர்பார்க்கின்றோம். – என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# தியாகி திலீபனை இந்திய அஹிம்சையும் இலங்கை பௌத்தமும் கொலை செய்தன

## அருட்தந்தை மா.சக்திவேல் உணர்ச்சிப் பேச்சு

தியாகி திலீபன் சாகவில்லை. அவர் கொலைசெய்யப்பட்டார். இந்தியாவின் அஹிம்சையும் இலங்கை தேசத்தின் சிங்கள பௌத்தமும் அவரை கொலை செய்துள்ளன. எனவே குற்றவாளிகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் கூண்டின் முன் நிறுத்தி தண்டிக்கப்படும் வரையும் இந்த தேசம் எங்கள் இலச்சியம். அரசியல் வெல்லும் வரை சாட்சியாக நாங்கள் போராடுவோம் எமது போராட்டம் தொடரும் என மனித உரிமை செயற்பாட்டாளரான வணபிதா மா. சக்திவேல் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தியாகதீபம் திலீபனின் 36 ஆண்டு நினைவேந்தலையிட்டு பொத்துவில் இருந்து யாழ் நோக்கிய தீலிபனின் உருவப்படம் தாங்கிய வாகன ஊர்தி வெள்ளிக்கிழமை மாலை பொத்துவில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போது வணபிதா சக்திவேல் இவ்வாறு தெரிவித்தார். தியாகி திலீபனுடைய 36 ஆவது நினைவு நாளில் சுடர் ஏற்றுகின்றோம். இந்த சுடர் தாயகத்தின் அரசியல் இலட்சியத்தின் சுடர் அன்று. திலீபன் என்ன கோரிக்கைகளை முன்வைத்தாரோ அந்தக் கோரிக்கைகளை இன்றும் நாம் அதற்காக போராடிக் கொண்டிருக்கின்றோம். அந்த போராட்டம் வெற்றி பெறும்வரையில் பயணத்தை தொடருவோம் அவரின் பாதத்தில் சத்தியம் செய்கின்றோம்.

எங்களை ஏமாற்றுகின்ற ஆட்சியாளர்கள்தொடர்ந்துஎங்களை ஏமாற்றுவதற்கு ஆயத்தமாக இருக்கின்றனர். தியாகி திலீபன் சாகவில்லை. அவர் கொலை செய்யப்பட்டார். இந்தியாவின் அஹிம்சையும் இலங்கை தேசத்தின் சிங்கள பௌத்தமும் அவரைக் கொலை செய்துள்ளன. சிங்கள பௌத்தம் கொலை செய்யும் அழிக்கும் என்பதற்கு அடையாளமாகத்தான் தியாகி திலீபன் இருக்கின்றார்.

இந்த நாடு அழிவுகளுக்கு மத்தியிலே தான் இவர்கள் மகிழ்சியைக் காண்கின்றனர். தங்களுடைய இனத்தையே அழிப்பவர்கள் 2019 உயித்த ஞாயிறு குண்டுவெடிப்பு, தெற்கிலே பாரிய வெடிப்பாக வெளிப்பட்டுள்ளது. இந்த வெடிப்பிற்கு காரணமாணவர்கள் மஹிந்த, கோட்டாபய மட்டுமல்ல இந்தியாவும் பதில் சொல்லவேண்டும்.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்காலில் ஒரு லட்சத்துக்கு அதிகமானவர்கள் கொல்லப்படும்போது இந்தியாவும் சர்வதேசமும் பாத்துக்கொண்டது. அவ்வாறு பார்த்துக் கொண்டதன் காரணமாகத்தான் 2019 ஆம் ஆண்டு இந்தக் குண்டுவெடிப்பு நடந்தது. அவர்களுடைய அரசியலுக்காக - அரசியல் தேவைகளுக்காக - இந்த நாட்டில் ஏழைகளைக் கொல்லதற்கு ஆயத்தமாக இருக்கின்றனர்.

எனவே சர்வதேசத்தைப் பார்த்துக்கேட்கின்றோம். எங்களுக்கு நீதிவேண்டும். அது சர்வதேச தவைமீட்டின் மூலம் ஏற்படுகின்ற நீதியாக இருக்கவேண்டும். இந்த நாட்டில் எங்களுக்கு நீதி கிடைக்கப் போவதில்லை இப்போது உண்மையான குற்றவாளிகள் யார் என்பது வெளிப்பட்டிருக்கின்றது. நாங்கள் 14 வருடங்களாக சர்வதேச விசாரணை வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். இதற்கு செவிமடுக்காத தென்னிலங்கை அரசியல்வாதிகள் இப்போது சர்வதேச விசாரணை வேண்டும் என்கின்றனர். எனவே, இது தான் நீதி. இது தான் மனுநீதி. இது தான் இறைநீதி. எந்த மக்கள் சர்வதேச விசாரணை வேண்டாம் எனக் கோரினார்களோ அவர்களின் வாயாலே இப்போது சர்வதேச விசாரணை வேண்டும் என்றால் இப்போது அவர்கள் பக்கம் திரும்பியிருக்கின்றது. எனவேகுற்றவாளிகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் கூண்டின் முன் நிறுத்தித் தண்டிக்கப்படவேண்டும். அதுவரை எமது போராட்டம் தொடரும். - என்றார். (05)

## சுன்னாகம், கைதடி லயன்ஸ் கழகங்களினால் கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும்!








சுன்னாகம், கந்தரோடை, கற்பக்குணையில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கைதடி லயன்ஸ் கழக உறுப்பினர்களான லயன் மகேந்திரன், லயன் நிர்மலா ஆகியோரின் இலவசக் கண்பரிசோதனை உதவியுடன் லயன் மகாதேவா - லயன் பூமாதேவி ஆகியோரின் ஞாபகார்த்தமாக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) 300 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கிவைக்கப்பட்டன.

லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் பீற்றரின் பிறந்ததினத்தை முன்னிட்டு அவரது 6 அம்சத் திட்டத்துக்கு அமைவாக மேற்படி கழகங்களால் இந்தச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்தக்கண்ணாடிகளில் 400கண்ணாடிகளைசுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் மகாதேவா பிரிதுவிராஜாவும் 150 கண்ணாடிகளை கொமர்சல்வங்கியின் முன்னாள் நிர்வாக இயக்குநரும் மோதர மட்டக்குழி லயன்ஸ் கழக உறுப்பினருமான லயன் சிவ. ரங்கநாதனும் அனுசரணை வழங்கினார்கள்.

வலி.தெற்கு பிரதேசத்தைவிட யாழ்.மாவட்டத்தின் பல இடங்களிலும் இருந்து பயனாளிகள் வந்து பயனடைந்தனர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்தவர்களான ஆளுநரின் ஆலோசகர் லயன் சி.ஹரிகரன், பிராந்தியத் தலைவர் லயன் பா.மரியதாஸ், வலயத் தலைவர் லயன் க.டினேஷ், மாவட்டத் தலைவர் லயன் தே.அகிலன், லயன்ஸ் மகளிர்அணிமாவட்டஇணைப்பாளர் லயன் ஹ.கௌசலாதேவி மற்றும் கழகத் தலைவர் லயன் செ.விஜயராஜ்ஆகியோரும்,கைதடி லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த ஆளுநர் சபை நிர்வாக உத்தியோகத்தர் லயன் மகேந்திரன், லயன் மகளிர் அணி பிரதி செயலாளர் லயன் ம.நிர்மலா ஆகியோரும் கலந்து கண்ணாடிகளை வழங்கிவைத்தனர். (05)

## குழந்தைகளுக்கான போஷாக்கு திட்டத்துக்கு பிரான்ஸ் நிதியுதவி




இலங்கையில் குழந்தைகளுக்கான போஷாக்குசேவைகளை ஆதரிப்பதற்காகபிரான்ஸ் 5 லட்சம் யூரோக்களை நிதியுதவியாக வழங்குகிறது.

நாட்டில் உள்ள குழந்தைகளிடையே போஷாக்கு குறைபாட்டைத் தடுப்பதற்கும் சிகிச்சை அளிப்பதற்கும் இலங்கையின் முயற்சிகளுக்கு ஆதரவாக யுனிசெப்பின் மூலம் 5 லட்சம் யூரோக்களை பிரான்ஸ்வழங்கியுள்ளது.

இந்த பங்களிப்பு 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குத் தேவையானபோஷாக்கு சேவைகளை வழங்க சுகாதார அமைச்சுடன் இணைந்து யுனிசெப் செயற்படுகிறது.

கடுமையான போஷாக்கு குறைபாட்டைத் தடுப்பதற்கும் சிகிச்சை அளிப்பதற்கும் குழந்தைகளின்ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும்வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் சரியான நடைமுறைகள் குறித்து பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்குக் கற்பிக்கப்படும்.

போஷாக்கு குறைபாட்டுக்கு அவசரமாக சிகிச்சை அளிக்கப்படாவிட்டால், குழந்தையின் உடல் மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியை கொல்லலாம் அல்லது சேதப்படுத்தலாம். குறிப்பாக, குழந்தையின் வாழ்க்கையின் முதல் இரண்டு ஆண்டுகளில், ஆனால் பெரும்பாலும் அவர்களின் வாழ்நாள் முழுவதும் வாய்ப்புகளை எதிர்மறையாகப் பாதிக்கும்.

இலங்கையின் பொருளாதார நிலைமையால் ஏற்படும் கஷ்டங்கள் குடும்பங்களை, குறிப்பாக ஏழை மற்றும் மிகவும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களைத் தொடர்கின்றன. ஒரு வழக்கமான மற்றும் போதுமான, சத்தான உணவுக்கானஅணுகல் பல இளம் குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்குஎட்டாத நிலையில் உள்ளது. இதனால் அவர்களுக்கு போக்குக் குறைபாடு ஏற்படும் அபாயம் உள்ளது. இந்த பங்களிப்பு யுனிசெப் மற்றும் அதன் கூட்டாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவுகிறது. தீவிர போக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்ட 1,500 குழந்தைகளுக்கு உணவு வழங்குவதன் மூலம் சிகிச்சை அளித்தல்.

6 வீத 23 மாதங்களுக்கு இடைப்பட்ட 120,000 குழந்தைகளுக்கு நுண்ணூட்டச்சத் துக்களை வழங்குதல். 2 லட்சம் பெற் றோர்கள் / பராமரிப் பாளர்கள் தங்கள் குழந்தைகளிடையே போக்குகுறைபாட்டைத் தடுப்பதற்கும் சிகிச்சை அளிப்பதற்கும் சரியான நடைமுறைகள் குறித்த துல்லியமான தகவல்களுடன் சென்றடைந்தனர்.

பிரான்ஸின் இது போன்ற பங்களிப்புகள் ஊட்டச்சத்து குறைபாட்டுக் கான அவசர சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்கு நமது தற்போதைய பதிலை அதிகரிப்பதற்கும், தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவுவதற்கும் எங்களின் கூட்டு முயற்சிகளை மேம்படுத்துகிறது என யுனிசெப்பின் இலங்கை பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக் கூறினார்.

ஒவ்வொரு பங்களிப்பும் ஒரு குழந்தை ஆரோக்கியமாக வளரவும் இலங்கைக்குத் தேவையான உற்பத்திக் குடிமகனாக வளரவும் வாய்ப்பை பிரதிபலிக்கிறது. யுனிசெப் இலங்கையில் உள்ள குழந்தைகளின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் வறுமை, கொவிட்-19 மற்றும் தற்போதைய பொருளாதார சிக்கல்களின் மோசமான விளைவுகளிலிருந்து மீள்வதை உறுதி செய்வதற்கும் தனது பணியில் சுறுசுறுப்பாக உள்ளது.

பிரான்ஸ்அரசாங்கம் இலங்கையுடன் நீண்டகால பங்காளித்துவத்தைக் கொண்டுள்ளது. யுனிசெப் ஊடாக வழங்கும் இந்த பங்களிப்பு சிறுவர்கள் மற்றும் இலங்கை மக்களுக்கான எமது பகி ரப்பட்ட பார்வையின் ஒரு நிரூபணமாகும் என இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன்-பிரான்கோயிஸ் தெரிவித்தார். இந்த பங்களிப்பு உணவு பாதுகாப்பு, போஷாக்கு மற் றும் நிலையான விவசாயத்துக்கான பிரான்ஸின் சர்வதேச உத்தி (2019 /2024) மற்றும் ஆரோக்கியமான,போஷாக்குமற்றும் போதுமான உணவை அனைவருக்கும் உறுதி செய்வதற்கும், வளர்ச்சிக்கான போஷாக்கு முன்முயற்சிக்கான அதன் உறுதிப்பாட்டுக்கும் ஏற்ப உள்ளது. அவர்களின் உணவு சுயாட்சியை மீட்டெடுக்க பிரான்ஸ் அடுத்த உச்சி மாநாட்டை 2024இல் நடத்தவுள்ளது. போஷாக்கு குறைபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கான இலட்சிய அர்ப்பணிப்புகளுக்காக முக்கிய போஷாக்கு வீரர்களை ஒன்றிணைக்கும் நம்பிக்கையில்பிரான்ஸ் உள்ளது. (05)

### போதை பழக்கத்திலிருந்து விடுபட

## மறுவாழ்வு சிகிச்சைக்கு தாமாக வந்தனர் 10 பேர்

போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுபடுவதற்குதாமாக முன்வந்த யாழ். இளைஞர்கள் 10 பேர் மறுவாழ்வுக்காக தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபையின் நிட்டம்புவ சிகிச்சை மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட செயலகத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற விசேட கூட்டத்தில் இந்த விடயம் வெளிப்பட்டது.

இதன்போது 21 முதல் 32 வயதுக்குட்பட்ட இளைஞர்களே மறுவாழ்வு சிகிச்சைக்காகத் தாமாக முன்வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# அரசியல்வாதிகள், அதிகாரிகளின் குடும்பத்தவரினது பாவனையில் 2,000 அரச வாகனங்கள் துஸ்பிரயோகம்

அரசியல்வாதிகள், பொலிஸ் அதிகாரிகள், பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட 2 ஆயிரம் உத்தியோகபூர்வ வாகனங்கள் அவர்களது குடும்ப உறுப்பினர்களது தனிப்பட்ட தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாக புலனாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பெருமளவில் பணம் வீண் விரயமாகின்றமையும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை சிலர் தங்களது தனியார் வாகனங்களைத் தாம் பணிபுரியும் நிறுவனத்துக்கு வாடகைக்கு வழங்கி அவற்றையும் தங்களது உத்தியோகபூர்வ வாகனங்களாகப் பயன்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களைத் தங்களது மனைவிகள் மற்றும் பிள்ளைகளின் பாடசாலை பயணங்களுக்கும் குடும்ப உறுப்பினர்களின் ஏனைய பயணங்களுக்கும் பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்புப் படையினரின் சாரதிகள் குடும்ப உறுப்பினர்களின் பயணங்களுக்கு அரசாங்கத்தால் பிரதானிகளுக்கு வழங்கப்படும் எரிபொருளைப் பயன்படுத்துவதாலும் இந்த பண இழப்பு இரட்டிப்பு மூன்று மடங்காக அதிகரிப்பதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (05)

## வாழ்வில் வசந்தம் 13ஆவது வீட்டு பணி ஆரம்பம்

அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பால் 'வாழ்வில் வசந்தம்' கிராமிய எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் பகுதி அளவான 13 ஆவது வீட்டுக்கான நிர்மாண வேலைகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு இன்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் தலைவர் ஐ எம் நிஸ்மி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் செயலாளர் ஏ புஹாது, பொருளாளர் எஸ் ஏ பாஸித், நிந்தவூர் சீ ஓ லெஸ்தகீர், சர்வதேச கல்லூரியின் நிதி உதவியாளர் ஏ அன்வர், நிந்தவூர் பிர்தௌஸ் ஜும்மா பள்ளிவாசல் பேஷ் இமாம் அல் ஹாபிழ் சிம்லி ஆதம் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

நிந்தவூரில் வீடற்றோருக்கான வீட்டு வசதியை ஏற்படுத்தி கொடுக்கும் நோக்குடன் பெஸ்ட் ஒப் யங் அமைப்பு, சீ.ஓ.லெஸ்தகீர் குடும்ப நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையுடன் இந்த பகுதி அளவான விட்டு நிர்மாணித்து கொடுக்க உள்ளனர். இதற்கென நிந்தவூர்-7 ஆம் பிரிவில் இருந்து தந்தை இல்லாத, வீட்டு வசதியற்ற, திருமண வயதை அடைந்த பயனாளி ஒருவருக்கு இந்த பகுதி அளவான வீட்டை நிர்மாணித்து வழங்க உள்ளனர்.

நிந்தவூரை சேர்ந்த கல்விமான் மர்ஹூம் சீ ஓ லெஸ்தகீர் அவர்களின் புதல்வரும், சீ ஓ லெஸ்தகீர் சர்வதேச கல்லூரியின் நிறைவேற்று பணிப்பாளருமான முன்னாள் சுங்க அத்தியட்சகர் ஓ.எல்.சப்ரி இஸ்மத் அவர்களின் ஒருங்கிணைப்பில் சீ ஓ லெஸ்தகீர் குடும்ப நிதியத்தின் பங்களிப்புடன் இந்த பகுதி அளவான வீடு நிர்மாணிக்கப்பட உள்ளது.

இதன் மூலம் வாழ்வதற்கு ஓரளவேனும் வசதியான வீடின்றி கஷ்டப்படும் ஏழைக் குடும்பத்தின் நிரந்தர வீட்டுக்கான கனவு நிறைவேறுகிறது குறிப்பிடத்தக்கதாகும். (05)

## மட்டு. வைத்தியசாலையில் 17 வயது யுவதி திடீர் சாவு

மட்டக்களப்பில் 17 வயதான யுவதியொருவர் உயிரிழந்த சம்பவம் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்கு யுவதியின் தாய் கருத்து தெரிவிக்கையில், 'தோல் நோய்க்காக சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே எனது மகள் உயிரிழந்துள்ளார். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தோல் நோய்ப் பிரிவில் மருந்துகளைப் பெற்று அருந்தி வந்த நிலையிலேயே எனது மகளுக்கு திடீரென காய்ச்சலும், வாந்தி நிலைமையும் ஏற்பட்டது. இதனையடுத்தே மகள் உயிரிழந்து விட்டார்' எனக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

எனினும் இந்த விடயம் தொடர்பில் உயிரிழந்த யுவதியின் பிரேத பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னரே உறுதியான தகவல்களை வெளியிடமுடியும் என வைத்தியசாலைத் தரப்பு தெரிவிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே பிரேத பரிசோதனை அறிக்கை வெளியான பின்னர் சம்பவம் தொடர்பான முழுமையான விவரங்கள் வெளியாகும் என எதிர் பார்க்கப்படுகிறது. (05)

## நோயாளர் பாதுகாப்பு செயற்திட்டத்துக்காக சம்மாந்துறை வைத்தியசாலைக்கு பாராட்டு

உலக நோயாளர் பாதுகாப்பு தினத்தை (செப்ரெம்பர் 17) முன்னிட்டு சுகாதார அமைச்சால் வைத்தியசாலைகளுக்கிடையில்

நடத்தப்பட்ட நோயாளர்களின் பாதுகாப்பை பலப்படுத்த மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் போட்டியில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை தேசிய ரீதியாக தெரிவுசெய்யப்பட்டு இரண்டு பாராட்டுச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டது.

தேசிய நோயாளர் பாதுகாப்பு தின நிகழ்வுகள் உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைப் பிரதிநிதி டாக்டர் அலகா சிங் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் அசேல குணவர்தன ஆகியோரின் முன்னிலையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி அஸாத் எம் ஹனிபா கலந்து கொண்டார்.

நோயாளர்களின் கருத்துக்களை உள்வாங்கி அவர்களின் பங்குபற்றுதலுடன் எவ்வாறு நோயாளர்களுக்கு உயர்தரமான மற்றும் பாதுகாப்பான சுகாதார சேவையை வழங்குதல் எனும் தொனிப்பொருளில் இவ்வருட நோயாளர் பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. (05)

## மகள் மீது வன்புணர்வு அவரது தந்தை கைது

மட்டக்களப்பில் மகளை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் தந்தையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு - கொக்குவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் 17 வயதுடைய சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய 58 வயதுடைய தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது மகளை கணவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் எனத் தாயார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து சந்தேகநபரை வெள்ளிக்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், பாதிக்கப்பட்ட சிறுமியை சிகிச்சைக்காக பொலிஸார் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இதன்போது சந்தேகநபரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸ் நிலைய பெண்கள் சிறுவர் பிரிவினர் விசாரணையை மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## கண்காணிப்பு

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட அட்டாளைச்சேனை மற்றும் பனங்காடு ஆகிய பிரதேச வைத்தியசாலைகளில் நடைபெறும் செயற்றிட்டங்கள் மற்றும் பிஎஸ்எஸ்பி வேலைத் திட்டங்களைக் கண்காணிப்பதற்காகவும் பொதுமக்களால் அனுப்பி வைக்கப்படுகின்ற அபிப்பிராயங்கள் மற்றும் கருத்துக்களை கேட்டறிந்து கொள்வதற்காகவும் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வைத்தியசாலைகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது குறித்த வைத்தியசாலைகளில் நடைபெறுகின்ற கட்டுமானப்பணிகளை துரிதப்படுத்துவதற்காகவும் நடைபெறுகின்ற வேலைகளின் தரத்தைப் பரிசீலிப்பதற்காகவும் தொழில்நுட்ப உத்தியோகத்தரை கேட்டுக்கொண்டதுடன் ஒப்பந்தக்காரர்களுடனும் இந்த விடயம் தொடர்பில் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

விசேடமாக இந்த விஜயத்தின் போது அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையில் துரிதமாக ஆரம்பிக்கப்பட உள்ள பிராந்திய மருந்து விநியோக பிரிவின் வேலைத்திட்டங்களையும் பணிப்பாளர் மற்றும் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## கிளிநொச்சியை சேர்ந்த பெண் சாதனையாளர்

வட்டக்கச்சி, கிளிநொச்சியை சேர்ந்த யதூ குலேந்திரன் அவர்களின் தொழில் முயற்சியை உலகளாவிய ரீதியில் எடுத்து சென்ற சர்வதேச தொழிலாளர் அமைப்பு (International Labour Organization). யதுசா வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் உயர்தரம் பயின்ற பின்னர் Yarl IT Hub இன் Uki கற்கை நெறியை பயிலும் போது ஓலை ஷாப் (Olai Shop) எனப்படும் பனை உற்பத்திகளை ஏற்றுமதி மற்றும் விநியோகித்தல் நிறுவனத்தை ஆரம்பித்து 60 இற்கு அதிகமான பெரும்பாலும் போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களை சேர்ந்த பெண்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி உள்ளார்.

இவர் 2021 வருடத்தின் சிறந்த பெண் முயற்சியாயாளர் விருதினை தேசிய ரீதியில் பெற்றிருந்ததுடன் பல்வேறு சர்வதே, தேசிய விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பனை சார் உற்பத்திகளான கைவினை பொருட்கள் (ஓலையால் செய்த பொருட்கள்), உணவு பொருட்களை (புனங்கட்டி) என்பவற்றை வாங்க முடியும். (05)

# அரச சுற்றாடல் நிறுவனங்களை மறுசீரமைக்க இந்த ஆட்சி முடிவு

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

சுற்றாடல் தொடர்பில் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களை மீண்டும் மறுசீரமைக்க இந்த ஆட்சி தீர்மானித்துள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

துறைமுக நகரின் செயற்கைக் கடற்கரையில் நடைபெற்ற கடற்கரையை சுத்தப்படுத்தும் வேலைத் திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச கடலோர தூய்மை தினம் மற்றும் கடல் வளப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு இந்த வேலைத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. கரையோரச் சூழல், நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்கள், ஆற்றங்கரைச் சூழல் ஆகியவை நமக்கு மிகவும் முக்கியமானவை. ஒரு புறம், ஒரு தீவு நாடாக, எமக்கு நீர்வளம் மிகவும் முக்கியமானது. மறுபுறம், சுற்றுலாத் துறையில் நங்கியிருக்கும் நாடு என்ற வகையில், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கத் தேவையான சூழலை நாம் எப்போதும் பாதுகாக்க வேண்டும்.

மக்களிடையே மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்தவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும், குறிப்பாக குழந்தைகளிடையே சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இதுபோன்ற திட்டங்கள் மிகவும் முக்கியம். எனவே இதை ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் எப்போதும் இவ்விடயங்கள் பற்றி கதைத்துக்கொண்டு மாத்திரமே இருந்தோம். எனவே, இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்துவது தான் மிகவும் முக்கியம்.

இது குறித்து செயற்படுவதற்கு, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், உள்ளூ ராட்சி மன்றங்கள் உள்ளிட்ட பல்வேற நிறுவனங்கள் உள்ளன. இது கடற்படையின் பொறுப்பு அல்ல என்றாலும், அவர்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர். இலங்கை சுற்றுலா சபையின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சுற்றுலா வலயங்கள் உள்ளன.

சூழல் தொடர்பான பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ள இந்த அரச நிறுவனங்களை மீண்டும் மறுசீரமைக்க நாம் தீர்மானித்துள்ளோம். அதற்காக ஒரு குழு நியமிக்கப்பட உள்ளது.

இந்த மறுசீரமைப்புப் பணிகளுக்குப் பின்னர், தற்போதுள்ள சட்டங்களை வலுப்படுத்தவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். இதற்கு இணையாக ஜனாதிபதி, இதற்கான செயலணி ஒன்றை நியமிக்கவும் உள்ளார். வேலைத்திட்டங்களை தயாரித்தல், செயல்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் அதன் பொறுப்பாகும்.

மக்களை முறையாகத் தெளிவுபடுத்துவதற்கும், நிலைபேறான திட்டங்களை செயல்படுத்தி சூழல் மாசடைவதைக் குறைப்பதற்கு நாம் இந்தத் திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கின்றோம்.

சூழல் நமக்கு மிகவும் முக்கியமானது. நாம் சூழலை பாதுகாக்காவிட்டால் அடுத்த தலைமுறை இந்த சுற்றுச்சூழலை இழக்க நேரிடும். மேலும், சூழலைப் பாதுகாப்பதன் மூலமே நாட்டின் பொருளாதாரத்தின் நிலைத்தல்தன்மையை உறுதி செய்ய முடியும். அந்த அனைத்து பொறுப்புக்களையும் அரசாங்கத்திடம் மாத்திரம் ஒப்படைக்க முடியாது.

சூழலைப் பாதுகாக்கும் பொறுப்பு மக்களுக்கும் உள்ளது. அந்தப் பொறுப்பை மக்களுக்குத் தெளிவுபடுத்த சரியான வேலைத்திட்டம் இருக்க வேண்டும். எனவே, அந்தப் பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்ற நாம் உறுதி பூண்டுள்ளோம். அதேபோன்று, குறைபாடுகளை தவிர்த்து நாம் இந்த செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டம் மிகவும் முக்கியமானது என்றே கூற வேண்டும். மேலும், இந்த திட்டத்திற்கு கலைத்துறையை இணைத்துக்கொண்டிருப்பது மிகவும் சிறந்த போக்கு ஆகும்.

மேலும் இதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதும் பெரும் பலமாக அமையும். இந்த வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்கள், திணைக்களங்கள் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன் என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.09.2023இல் வெளியிடப்பெற்றது.